சுதேசமித்திரன்



ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை.

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 65,00,000.

கிளைகள் : { பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, நாகபுரி.

★

பிரதம ஏஜெண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்:- 1 முதல் 3 உமது எதிர் கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35,

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ, 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

எஸ். எம். டி. வேலு அண்டு கோ.,

சின்னக்கடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyenarayana Chetty St., Royapuram, Madras.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்

"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

சக்தி ஆருடம்!

By

(சக்தி பால ஜோதிடர்)

மேன்மை வாய்ந்த நற்சாட்சிகள் உண்டு.

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B.—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கிழவீதி	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

டெலிபோன்: 2246. தந்தி : கிளாவர் பீடி



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனுர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.

★

FREE GIFT.

OF YOUR 1949 HOROSCOPE. IMPORTANT PLANETARY INFLUENCES BRING NEW OPPORTUNITIES FOR UNPRECEDENTED IMPROVEMENTS IN YOUR SOCIAL, PROFESSIONAL & FINANCIAL AFFAIRS DURING 1949. LEARN AT ONCE THE GREAT GOOD LUCK THAT AWAITS YOU.

SEND NO MONEY

SEND ONLY YOUR HOROSCOPE COPY OR DATE OF BIRTH AND YOU WILL BE THRILLED WHEN YOU RECEIVE THE INTENSELY INTERESTING FORECAST OF YOUR FUTURE ABSOLUTELY FREE. WRITE AT ONCE TO—

Prof. SEKHAR. B.A. (Wash) M.I.B.M. (U. S. A.)
The Great Mesmerist & Zamindar
ELLORE. (West Godavari Dt.)

N. B. All correspondence & Readings in English only

★

நவீன
மோஸ்தர்களில்
புராதன அழகு



அமைப்பின் அழகு, சிறந்த தரம், கைதேர்ந்த வேலைப் பாட்டுக்கு எமது ஐம்பது வருஷ அனுபவம் உத்திரவாதம். எப்பொழுதும் உதவிபுரிய தயாராக இருக்கிறோம்.

உம்மிடி
ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.
நகை வியாபாரிகள்

D.J.S.102 T.S.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினல் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி
R.M. நாராயணசாமி பிள்ளை
தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

தமிழ்நாடு நடிகர்கள் டைரக்டரி

சினிமாவில் நடிக்கவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களின் போட்டோ பிளாக்கைப் பிரசுரித்து, அவர்களைத் தமிழ்ப் படங்களைத் தயாரிக்கும் பிலிம் ஸ்தாபனங்களுக்கு அறிமுகப் படுத்திவைக்கிறோம். 5 லட்ச ரூபாய் மூலதன அடிப்படையில் ஆரம்பமாகும் ஒரு பிலிம் கம்பெனியில் நடிகர்களாகச் சேர ஒரு அரிய சந்தர்ப்பம். விவரங்களுக்கு 2 முக்காலணா ஸ்டாம்புகளுடன் விண்ணப்பிக்கவும்.

" இன்ப நிலையம் "
சங்கர்நகர், புதூர், மதுரை.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள்
கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ கார்த்திகை௴ 6௳ ★ 1948-௵ நவம்பர்௴ 21௳ No. 43

காமன்வெல்த் உறவு

இந்தியா இனி காமன்வெல்துடன் உறவு கொள்வது உசிதமா? உசிதமாயின், அந்த உறவு முறையை நிர்ணயிக்க வேண்டிய இறுதி அதிகாரம் யாருக்கு? இவைபற்றி நேற்று பண்டித ஜவாஹர் அரசியல் நிர்ணய சபையில் வெளியிட்டுள்ள விளக்கம் தேச முழுதும் திருப்தியுண்டாக்கும். சமீபத்தில் நடந்த காமன்வெல்த் மகாநாட்டையொட்டி, இப்பிரச்னையைக் குறித்து இந்நாட்டில் சிரத்தை விசேஷமாக வளர்ந்து வந்திருக்கிறது. இதுபற்றி இதுவரை வெளியாகி வந்துள்ள ஹேஷ்யங்களும் பல. காமன்வெல்த் உறவுபற்றி நேரு அம்மகாநாட்டில் தன்னிச்சையாக வாக்குக் கொடுத்து, தேசத்தைக் கட்டுப்படுத்திவிட்டதாகக் குறை கூறத் துணிந்தவர்களும் உண்டு. உண்மையில், பொது மக்களின் கவனத்தைக் கவரும் பொருட்டு மற்றவர்களைவிடத் தங்களை அதிதீவிர தேச பக்தர்களாகக் காட்டிக்கொள்வதே இத்தகையோரின் நோக்கம். ஆனால், இப்பிரச்னையை இறுதியாக முடிவு செய்யக் கூடியது அரசியல் நிர்ணய சபையொன்றே; வேறு யாருக்கும் இதில் அதிகாரமில்லை யென்பதை நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியுள்ளோம். பண்டித ஜவாஹர் நேற்றைய கூட்டத்தில் முக்கியமாக இந்த உண்மையையே வற்புறுத்திக் கூறியுள்ளார்.

காமன்வெல்த் உறவுபற்றி லண்டனில் நடந்த சம்பாஷணைகளில் பண்டித நேரு தேசத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தவில்லை; இந்திய சர்க்கார் சார்பில்கூட அவர் வாக்குக் கொடுக்கவில்லை. இவ்விஷயத்தில் இறுதியாக முடிவு செய்யும் அதிகாரம் முழுதும் அரசியல் நிர்ணய சபைக்கே என்பதில் லண்டன் சம்பாஷணையினிடையே தாம் சிறிதும் சந்தேகத்துக்கு இடம் வைக்கவில்லையென்பதை நமது பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேசமயத்தில், அரசியல் நிர்ணய சபையின் லட்சியத்தைப்பற்றிய தீர்மானத்தையும் பண்டித நேரு காமன்வெல்த் மகாநாட்டினருக்கு அறிவுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா பரிபூர்ணமான ஆதிபத்தியத்துடன் கூடிய ஒரு சுதந்திரக் குடியரசாக விளங்க வேண்டுமென்பது அத்தீர்மானத்தின் கருத்து. இதற்கு முரண்படாத ஒரு உறவையே இந்நாடு காமன்வெல்துடன் கொள்ள முடியுமென்பது தெளிவு.

பண்டித நேரு எடுத்துக் காட்டியதுபோல் காமன்வெல்துக்கும், இந்தியாவுக்கும் நேச உறவு இருந்து வரவேண்டுமென்பதில் இந்நாட்டில் பலருக்குச் சிரத்தையுண்டு. பிரிட்டன் மீது ஏற்பட்ட பழைய விரோதத்தை இன்னும் மனதில் கொண்டு காமன்வெல்துடன் ஒரு தொடர்பும் வேண்டியதில்லையெனச் சிலர் பேசலாம். ஆனால், விரோதத்துக்குக் காரணமான நிலைமை நீங்கிய பின்னும் பகையுணர்ச்சி நீடிப்பது பொருத்தமற்றது. மேலும், பிரத்தியட்ச நிலைமையைப் பற்றிய உணர்வுடன் சிந்திக்கும் யாரும் இந்நாட்டுக்கு காமன்வெல்த் உறவால் பல விதத்தில் அனுகூலமுண்டு என்பதை ஒப்புக் கொள்வர். இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டதாயினும், ராணுவம், பொருளாதாரம் போன்ற துறைகளில் மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகிறது. மற்ற நாடுகளின் கூட்டுறவின் மூலம் நமது சக்திகளை வளர்த்துக் கொள்ளும் வேலை ஓரளவு சுலபமாகக்கூடும். எனினும், இத்தகைய அனுகூலங்களுக்காக தனக்குள்ள பரிபூரணமான சுதந்திர அந்தஸ்

'டெஸ்ட்' மாட்ச் ஆரம்பமாவதற்கு முன்தினம் கவர்னர்-ஜெனரல் ராஜாஜி அளித்த விருந்தின்போது பிரசன்னமாயிருந்த மேற்கிந்திய கோஷ்டியினர் நடுவில் பண்டித நேரு நிற்பதைக் காண்க.

தையோ, தனது அபிலாஷைகளில் எதையுமோ விட்டுக்கொடுக்க இந்நாடு சிறிதும் தயாராயில்லை. நமது அரசியல் நிர்ணய சபை லட்சியத்தைப்பற்றி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் பண்டித ஜவாஹர் காமன்வெல்த் மகாநாட்டினருக்கு எடுத்துக் காட்டியதன் நோக்கம், அவர்களுக்கு மேற்குறித்த உண்மையை அறிவுறுத்துவதுதான்.

இந்த லட்சியத்துக்கு ஒத்தவாறு காமன்வெல்துடன் நாம் எத்தகைய உறவு கொள்ள முடியும்? பண்டித ஜவாஹர் குறிப்பிட்டது போல் இது கவனமாக ஆராயவேண்டிய விஷயம். இதில் இறுதியான அதிகாரம் அரசியல் நிர்ணய சபைக்குத்தானுயினும், அதன் முடிவு பெரிதும் காமன்வெல்தைச் சேர்ந்த மற்ற நாடுகளின் மனோபாவத்தைப் பற்றிப் பண்டித ஜவாஹர் இனி வெளியிடக் கூடிய கருத்துக்களையே பொறுத்திருக்கும். எப்படியும் இப்பிரச்னையைப்பற்றிய முடிவுக்கும், அரசியல் நிர்ணயத்துக்கும் சம்பந்தமிருப்பதாக எண்ணுவது தவறு; காமன்வெல்த் உறவு என்பது நமக்கு இஷ்டமான போது, இஷ்டமானபடி அமைத்துக்கொள்ளக் கூடிய ஒரு வெளிநாட்டு விவகாரமே. எனவே, அதற்கும், உள்நாட்டு அரசியல் அமைப்புக்கும் ஒரு தொடர்புமில்லையென்பதைப் பண்டித நேரு தெளிவுபடுத்தியுள்ளார்.

பண்டித நேருவின் பிரசங்கத்தில் மக்கள் மனதைக் கவர்ந்துள்ள வேறு இரு பிரச்னைகளைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஒன்று பாஷாவாரி மாகாணங்களைப் பற்றியது; மற்றொன்று தேசிய பாஷையான ஹிந்தியை அமுலாக்கும் வகையைப் பொறுத்தது. பாஷாவாரி மாகாணக் கொள்கை அனைவரும் ஒப்புக்கொண்டதுதான். எனினும், அதை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான வழி வகைகளைப்பற்றி முறைப்படி நிதானமாக யோசிக்கக்கூடிய சூழ்நிலை தற்போதில்லை. மேலும், இதைவிடப் பன்மடங்கு அவசரமான பிரச்னைகள் தற்போது நாட்டை வாட்டி வருகின்றன. எனவே, மாகாணவாரிப் பிரிவினையைச் சிறிது காலம் ஒத்திவைப்பதுதான் உசிதமென்று ஏற்கனவே சர்தார் படேலும், இப்போது பண்டித நேருவும் விடுத்துள்ள அறிவுரையை இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்திக்க வேண்டுகிறோம். பாஷைப் பிரச்னையிலும் இவ்வாறு நிதானமிழந்தவர்களுக்குப் பண்டித நேரு சரியான எச்சரிக்கை செய்திருக்கிறார். ஹிந்தியே தேசிய பாஷையாவதென்பது அநேகமாக அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். எனினும், இது நாளடைவிலேயே காரியகரமாக முடியும். இதில் அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்வது அடிப்படையான நோக்கத்துக்கே ஹானி விளைத்துவிடும் என்பதைப் பண்டித நேரு எடுத்துக்காட்டியுள்ளார்.





★

இப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் புகைப்படங்கள் வட லண்டன் பிராந்தியத்தில் டாட்டன்ஹாமிற்கருகே குழந்தைகளுக்கு ரஸ்தா விதிகளைப் போதிப்பதற்காக லண்டன் கவுண்டி கவுன்சிலினால் நடத்தப்படும் ஒரு மாதிரி பயிற்சி நிலையத்தில் எடுக்கப்பட்டவை. இங்கு குழந்தைகளுக்கு ரஸ்தா விதிகள் விளையாட்டு மூலமாகவே போதிக்கப்படுகின்றன. இந்நிலையத்தில் கவுன்ஸில், குழந்தைகளுக்கு சைக்கிள்களும் சப்ளை செய்கின்றது.

இப்பயிற்சி நிலையத்தில் பல நூதன அம்சங்களும் உள்ளன. சாதாரண ரஸ்தாக்களில் போக்கு வரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உபயோகிக்கப்படுவது போன்ற டிராபிக் விளக்குகள், வளைந்து செல்லும் ரஸ்தாக்கள், பாதசாரிகள் ரஸ்தாவைக் குறுக்கே கடந்து செல்லுவதற்கான இடங்கள், இதர சகல விதமான ரஸ்தாக்களிலுள்ள குறிகள் ஆகியவை அனைத்தும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. ரஸ்தாக்களைப் பற்றிக் குழந்தைகளுக்கு அடிக்கடி போதனை வகுப்புகள் நடத்தப்படுவதுடன், ஓய்வு நேரங்களில் இவ் "விளையாட்டு ரஸ்தா"க்களை உபயோகிப்பதற்கும் ஊக்கம் அளிக்கப்படுகிறது.

★



மாலைப்பொழுது

பாரதீயன்

1

உலகிலுள்ள கலைஞரெல்லாம் ஒன்று கூடி
ஓயா திராப் பகலாய் உழைத்திடினும்,
இலகுமொரு "மாலை" யின் சித்திரத்தை
எழிலுறவே தீட்டிடவு மியல்வ தாமோ?
அலகில் விரி திரையதுவாம் வான் வெளியில்
அரைக்கணத்தி லாயிர வன்ன பேதம்
நிலவிடுதற் கென்செய்வார், நிவந் தொளிரும்
நெடுவில்லின் வனப்பிற்கோர் நிகரு முண்டோ?

2

மேகமெனும் பெருந்திரையின் பின்னே நின்று
மெல்லமெலப் புதுமணத்தின் பெண்ணேபோல
மோகனமாஞ் சோதிப்பொன் முகத்தைக் காட்டி
முறுவலிக்கும் கதிரோனின் ஒளியை மண்டி
மாகடலும், எண்டிசையும், மண்ணும் விண்ணும்,
மகிழ்வென்னுந் தேன்வெள்ளம் பாயக்கண்டீர்!
சோகமினிக்கொள்ளுதற்கோர் கணமும் உண்டோ?
சுத்தப்பே ரின்பமடா! இன்பம் எங்கும்!!

3

சோலைமணஞ் சுமந்துவரும் தென்றலோடு
சுதந்திரமாம் இசை சேர்க்கும் வானம்பாடி;
காலையிலே கூடுவிட் டிரையைத் தேடி
காதவழி சுற்றிவருங் காக்கை, மைனு
சாலைவெளி மரத்தினிலே கூடி, இன்பஞ்
சார்கதைகள் பலபேசிக் களிக்கும்; தத்தம்
வேலையினை விட்டுழவர், மாந்த ரெல்லாம்
விஞ்சுசுவைத் தெம்மாங்கு விளைத்து நிற்பார்.

4

பகலென்றும் இரவென்றும் பகுப் பிலாது
பாழான உறக்கத்தே யாழ்ந்திருப்பீர்!
குகைபோலுஞ் சிற்றறையி னுள்ள டங்கி
குனிந்ததலை நிமிராது பணிகள் செய்வீர்!
இகமிதில் இன்பமே இல்லை யென்று
ஏமாற்று வித்தைக ளெடுத் துரைப்பீர்!
சகமெலாம் பொய்யென்று சாத்தி ரத்தை
சாட்சியாய் அருகிருத்திச் சாற்று வீர்காள்!

5

பொற்சுண்ணந் தனைத்தேனிற் குழைத் தெடுத்துப்
பூசினபோல் திசையெல்லாம் பொலியக் கண்டு
கற்சிலைக்கும் உயிர்வந்து களிக்கும் என்னில்,
காலமெலாம் வீண்போக்கி, கவலை செய்யும்
சிற்சிலவாப இடர்தன்னிற் சிந்தை, நொந்து
சிதறுற்றுக் கணந்தோறும் மடிதல் வேண்டாம்;
பொற்கலசந் தனிலமுதே போல வெங்கும்
பொங்கிடுமிவ் வின்பவொளி நுகர வாரீர்!

பிள்ளை இன்பம்

குழந்தைச் செல்வம், வாழ்வு சீர்பெற்று விளங்குவதற்கு எவ்வளவோ இன்றியமையாத சாதனமாக அமைந்திருக்கிறது. சோகத்தைத் துடைத்து வாழ்வை போக மயமாக்கி துன்பங்களைக் களைந்தெறியும் சக்தி குழந்தைகளின் மழலைச் சொற்களுக்குண்டு. அன்புக்கும், ஏடுகள் சொல்லாத இன்பக் கதைகளுக்கும் உறைவிடமாக விளங்குவது பிள்ளைப் பிராயம். எனவே, சிறு குழந்தையின் முல்லைச் சிரிப்பின் முன்னால் மூர்க்கத்தனங்களெல்லாம் சிதறிப்போய்விடுகிறதென்றார் கவி பாரதியார்.

கண்ணபிரானுடைய பிள்ளைப் பிராயத்து லீலைகளைக் காணக் கொடுத்துவைக்காத பாவியானேனே என்று தேவகியின் தாயுள்ளம் சிறைச்சாலையில் தவியாய்த் தவித்ததாம். கிருஷ்ண பரமாத்மாவின் பிள்ளைப் பிராய லீலைகளையெல்லாம் காணவேண்டுமானால் அதற்குத் தொல்லை இன்பம் வேண்டும். "அந்த இன்பத்தின் இறுதியை ஆயர்பாடியைச் சேர்ந்த யசோதைக்கல்லவா அருளிவிட்டாய்!" என்று ஏங்கிய தன் அன்னையின் தாபத்தை நொடிப் பொழுதில் தீர்த்துவைத்தார் கண்ணபெருமான். அதேமாதிரி தன் சிறு குழந்தையின் ஒவ்வொரு செயலிலும் புதுமைகாணும் தாய் தன்னுடைய நினைப்பையெல்லாம் அதன்பேரிலேயே பூர்ணமாகச் செலுத்திவிடுகிறாள். தன்னிடமிருந்த அன்பின் பெரும் பகுதியும் குழந்தையிடம் சென்றுவிடுவதைக் கணவன் உணர்ந்து ஓரளவு ஏங்குகிறான். இது சாதாரணமாக ஏற்படக் கூடிய விஷயம். ஆனால், இதற்கு மாறாகத் தலைவியிடம்கொண்ட காதலைக்காட்டிலும் தன்புதல்வனிடத்தில் அதிக அன்பு செலுத்தும் தலைவனைக் கண்டு செவி யொருத்தி ஆச்சர்யப்படுகிறாள்; அதோடு ஆனந்தமும் அடைகிறாள். இத்தகைய அதிசய ஆனந்த வரலாறு ஒன்றை ஐங்குறு நூறு பாடலொன்றில் காணலாம்.



தலைவனும் தலைவியும் தனித்து வாழும் இடத்தில் அவர்களது குல விளக்காகத் திகழும் புதல்வன் தேர்பற்றி இழுத்து விளையாடுகிறான். தன்னுடைய செல்வக் குமாரன் ஓடிவரும் போதும், ஆடித்திரியும்போதும் எல்லையில்லாத மகிழ்ச்சியை அடையும் தலைவன், தன் குழந்தை தேரிழுத்து வரும்போது மெய்மறந்து போகிறான். அவ்வழகை அள்ளிப் பருகியதாக விருக்கிறது அவன் பார்வை. இது தன் காதலியிடம் செலுத்தி வந்த அன்பைவிட அநேகம் மடங்கு பெரிதாகிவிடுகிறதாம். இக் கருத்தைத் தாங்கிய பாட்டு வருமாறு:—

புணர்ந்த காதலியிற் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிதா கின்றே
அகன் பெருஞ் சிறப்பில் தந்தை பெயரன்
முறுவலின் இன்னகை பயிற்றிச்
சிறு தேருருட்டுந் தளர் நடை கண்டே.

ஐங்குறு நூறு.

தான் மணந்த காதலியிடத்துள்ள அன்பைக் காட்டிலும் தன் புதல்வனிடத்துள்ள அன்பு பெரிதாகும்.

தந்தை பெயரன்—மகன், தன் தந்தையின் பெயரைத் தன் மகனுக்கிடுதல் மரபு.

(அகன்ற பெரிய)—மாபெரும் சிறப்பினையுடைய தந்தையின் பெயரை.

முறுவலின்—புன்சிரிப்பால்

இன்னகை பயிற்றி—இனிய மகிழ்ச்சியை உண்டாக்கி.

ரத்த பாசம்

பா. ராதாகிருஷ்ணன்

ஜயநாராயண் உயர் குலத்தில் பிறந்தவன்—மிகுந்த செல்வமும் செல்வாக்கும் படைத்தவன். ஆனால், வாழ்க்கையில் வெற்றி பெறுவதென்றாலே ஏழை மக்களைச் சுரண்டுவது தவிர்க்க முடியாததொரு செயலல்லவா? ஜயநாராயணின் வெற்றியின் ரகசியமும் இவ்விதிக்கு விலக்கல்ல. தன்னலமொன்றைத்தவிர வாழ்க்கையில் வேறு குறிக்கோள் அவனுக்கு இல்லை. அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷமும் அவனுக்குப் பரிபூரணமாக அமைந்திருந்தது. மனதிற்கொத்த மனைவியையும் தந்தை சொல் தவறாத தனயனையும் பெற்றிருந்தான் அவன். 'அதுவரை துன்பம்' என்று சொல்லக்கூடிய அநுபவம் ஒன்றும்அவன் வழிச் செல்லவில்லை.

ஆனால், என்றைக்கும் ஒரே இன்பமாகவே கழிவதல்லவே மனித வாழ்வு? நாட் செல்லச் செல்ல நிர்மலமான வானவெளியில் மேகங்கள் மூட்டம் போடுவதுபோல், சிந்தனைக் கூட்டங்கள் வந்து அவன் மனதில் கவிந்துகொள்ளத் தொடங்கின. கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு வீட்டில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த புதல்வன் ஸ்ரீநாராயணின் போக்கைப் பற்றியதே அவன் கவலைகள்.

குணத்திலும் கல்வியறிவிலும் தன் தந்தையினும் எவ்வகையிலும் உயர்ந்தவன்தான் ஸ்ரீநாராயண். ஆனால், குறுகிய ஹிருதயமுள்ள தகப்பன், மகனின் அகன்ற உள்ளத்தையும் பரந்த நோக்கங்களையும் கண்டு மனம் புழுங்கினான்! பொருமையினாலல்ல; ஏமாற்றத்தினால். தனக்கு வெற்றி தேடித் தந்த வழிக்கு நேர் முரணான வழியைத் தன் மகன் பின்பற்றுவது அவனுக்கு வேதனை தந்ததில் வியப்பென்னவிருக்கிறது?

அவனது எளிய வாழ்வும் பெருந்தன்மையான சுபாவமும் தனது அதிகார நிலைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றதல்லவென எண்ணினான் நாராயண். தன் பொருட்டு உழைக்கும் அடிமைகள் போன்ற ஹரிஜனங்களிடையிலும் யாதொரு வித்தியாசமுமின்றிக் கலந்து பழகிவரும் மகனைக் கண்டித்துப் பயனொன்றும் காணவில்லை. மற்ற எவ்விஷயத்திலும் தந்தையினுடைய சொல்லைத் தட்டி நடப்பவனல்ல ஸ்ரீநாராயண். ஆனால், இவ்விஷயத்தில்மட்டும், தான் செய்வதில் தவறொன்றுமில்லையென்ற உணர்ச்சி வேரூன்றி விட்டதோ என்னமோ அவ்விளைஞன் மனதில்; அல்லது ஊசியைக் காந்தம் இழுப்பது போல் ஏதோ ஒரு சக்திதான் அவனை இல்லத்தினின்றும் உந்தித் தள்ளிச்சென்று, மீண்டும் மீண்டும் அவ்வேழைச் சகோதரர்களினிடையிலேயே புழங்கச் செய்ததோ!

காரணத்தை அறிந்துகொள்ள நெடுநாளாகவில்லை, தகப்பனுக்கு. உண்மையை உணர்ந்ததும் அவன் கவலை பன்மடங்காகப் பெருகியது. கணக்கற்ற செல்வம் படைத்தவனாயினும், எப்பாவத்துக்கும் அஞ்சாதவனாயினும், இன்னும் சமூகத்தின் கட்டுப்பாடுகளை மீறி நடக்கவோ, அவற்றை உதறி எறியவோ துணிவேற்படவில்லை அவனுக்கு. எனவே, ஹரிஜனப்பெண் பாலாவிடம் தன் மகன் சகஜமாகப் பழகி வந்தது அவனது நெஞ்சில் ஒருவித பயத்தை ஏற்படுத்தியது. பின்னால் விளையப்போகும் தீமையை முன்கூட்டி அவனுக்கு உணர்த்துவது போல் அவன் மனம் 'பட பட' வென்று அடித்துக் கொண்டது.

பாலாவை அவன் பார்த்திருக்கிறான். அவளது சகோதரன் சீலாவையும் பார்த்திருக்கிறான். அவர்களிருவரும் இரட்டைக் குழந்தைகள்—தாய் தந்தையரையிழந்த அனாதைகள். ஆனால், ஹரிஜனங்களிடையில் சாதாரணமாகக் காணமுடியாத உடல்

வனப்புபெற்றிருந்தனர்என்பதை ஜயநாராயண் அறிந்திருந்தான். இறந்து மறைந்துவிட்ட அவர்களது தாயைக்கூட இளம் பருவத்தில் பார்த்த ஞாபகம் அவனுக்கு இருந்தது. அவளொன்றும் அழகியல்ல. அவர்களது தந்தையையோ, சேரியில் யாரும் இன்னாரென்றே அறியார். விவாகமாகாத கன்னியான தாயாருக்குப் பிறந்த குழந்தைகள் தாம் இவை. தாழ்ந்ததாகக் கருதப்பட்டு வந்த ஹரிஜன சமூகத்தில், மேல் ஜாதியினரின் விளையாட்டுப் பொம்மைகளாக வாழ்ந்து பழகிவிட்ட பாமர மக்களின் மத்தியில் தகப்பனின் பேரறியாது பிறந்து வளர்ந்து வந்த இந்த அனாதைச் சகோதரர்கள் மேனிவனப்பு மட்டுமின்றி, நல்லொழுக்கமும் புத்திக் கூர்மையும் பெற்றிருந்தனர். ஆயினும் என்ன? ஜயநாராயணின் மனத்தில் அத்தகைய விபரீதமான சிந்தனைகள் ஏன் உதிக்கின்றன? எதை எண்ணி அவன் முகம் வாடுகின்றான்?

* * * * *

"தந்தையின் சொல்லைத் தட்டி நடத்தல் சரியல்லதான். ஆனால், சிற்சில விஷயங்களில் மட்டும் அவர் மனதில் வேரூன்றியுள்ள நம்பிக்கை தவறானது என்று எனக்குப் படுகிறது. இவ்வேழை ஹரிஜனங்களிடை நான் கலந்து பழகுவதால் என்ன தீமை? அவர்கள்முன்னேற்றத்துக்காக உழைப்பதால் என்ன நஷ்டம்? அதிலும் இந்த இரட்டைச் சகோதரர்கள் விஷயத்தில் ஏன் என் மனம் இவ்வளவு ஈடுபட்டிருக்கிறது? தன்னையறியாமல் ஏதோ ஒரு சக்தி என்னை வசீகரிக்கிறதே. இது தீய சிந்தனையல்ல என்று என் மனசாக்ஷி கூறுகின்றது. பாலா அழகிதான். ஆனால், அவள்பால் எனக்குத் தோன்றும் உணர்ச்சி காமமல்ல, காதலுமல்ல. இதற்கெல்லாம் மேற்பட்ட ஒரு தன்னலமற்ற அன்புதான் அது. அதைத் தவறாக எண்ணி அஞ்சுகிறாரோ என் தந்தையார்?" என்று சிந்தித்துக் கொண்டிருப்பான் ஸ்ரீ நாராயண்.

இப்படி எண்ணமிட்ட வண்ணம் ஒரு நாள் மாலை உலாவிக் கொண்டிருந்தான் அவன். மாந்தோப்புக்கு அருகில் வந்துகொண்டிருந்தவன், தோப்புக்குள்ளிருந்து ஏதோ பேச்சரவம்கேட்டு சற்று நின்றான். கேட்டது பாலாவின் சகோதரன் சீலாவின் குரலும், இன்னும் அவனுக்குப் பரிச்சயமான ஒரு ஆண் குரலும்தான். ஆ! அவன் தான் பத்ரா. தன் தந்தையின் முக்யமான கையாள்.

"என்னமோ தம்பி! நீங்க நல்லாயிருக்கணுமேன்னு சொல்றேன். பாலாவை எனக்குக் கட்டிக்கொடுத்துட்டயானா, அவளை என் கண்ணாட்டம் வச்சுப்பேன். பெரிய யசமான் வேறே எனக்குத் தனியா நிலம் வாங்கித் தர்ரேன்னு சொல்லியிருக்காரு. அதை வச்சிக்கிட்டு எங்கேயாவது போய் மானமாப் பொளைச்சுக்கறோம். நீயும் எங்ககூட வந்துடலாம்."— இது பத்ரா.

"அதெல்லாம் சரி அண்ணே. அவளுக்கு உன்னைக் கட்டிக்கிட இஷ்டமில்லை. அப்புறம் என்னை என்ன செய்யச்சொல்றே?"–இது சீலா.

" இஷ்டம்—இஷ்டமில்லை எல்லாம் உன் கையிலல்ல தம்பி இருக்குது? நீயாப்பாத்து 'பத்ராவைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணும்னு சொல்லிப்புட்டா, அப்புறம் அவளுக்கு மறுபேச்சென்ன இருக்கு?"

"அண்ணே! அவளுக்கு இஷ்டமில்லாட்டா, நான் கட்டாயப்படுத்த முடியாது. ஆமாம். நானென்ன மிருகமா? மனிசன் தானே நானும்?"

இப்போது பத்ராவின் பேச்சில் கோபம் தொனிக்கத் தொடங்கியது. "தம்பி! நீ யாரு கிட்டப் பேசறே இன்னு ஞாபகமிருக்கட்டும். இந்தப் பத்ரா வாயைத் திறந்து கேட்டுட்டான்னா அப்புறம் ஒருத்தனும் "முடியாது'ண்ணு இதுவரை சொன்னது கிடையாது. தெரியுமா?" என்று மிரட்டினான் அவன். ஆனால், அவனுக்குப் பதில்ளித்த சீலாவின் குரலிலும் பயமோ குழைவோ இல்லை.

"எல்லாம் தெரியும். ஆனால், அதற்காக என் தங்கையின் சந்தோஷத்தை உனக்குப் பலியிடுவதென்பது முடியாத காரியம்" என்று ஆணித்தரமான பதிலளித்தான் சீலா. அதைத் தொடர்ந்து பத்ராவின் கர்ஜனை கேட்டது. "ஓஹோ, பயலே! அப்படியா? சரி, உன்னைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று உறுமியவண்ணம் பத்ரா வேகமாக நடந்து சென்றான். ஆனால், அவன் சென்றது ஸ்ரீ நாராயண் நின்ற திக்குக்கு எதிர்த் திசையில். எனவே, மாலையின் அம் மங்கின இருளில் அவனது கண்ணுக் கெட்டாதவாறு மறைந்துவிட்டான் பத்ரா.

ஸ்ரீ நாராயண், பத்ராவை நன்கறிவான். தீமையும் கொடுமையுமே உருவெடுத்தது போன்ற காதகன் அவன். கொலை, கொள்ளையெல்லாம் அவனுக்குத் தண்ணீர் படும் பாடு. இவ்வளவிலும் அவன் ஜயநாராயணின் கையாள். செல்வனின் ஆதரவும் சேர்ந்தால் இத்தகைய கயவர்களின் துடுக்கிற்குக் கேட்கவேண்டுமா? இப்போது அவன் அந்தக் கள்ளங் கபடற்ற சிறுமி பாலாவை வேறு தன் மிருகப் பசிக்கு இரையாக்கிக் கொள்ள முயலுகிறான். அவள் மனம் இவனை விரும்பாதது இயற்கை தானே? அதற்காக அவன் சீலாவைப் பயமுறுத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது?

பத்ராவை நேரில் கண்டு அவன் போக்கு சரியானதல்லவென்று எச்சரிக்க விரும்பினான் ஸ்ரீ நாராயண். கொடியவனாயினும் தன்பால் பத்ரா கொண்டிருந்த மரியாதையை அவன் அறிவான். ஆனால், பத்ரா எத்திசையை நோக்கிச் சென்றான் என்றே தெரியவில்லை. அப்போதிருந்த குழம்பின மனோ நிலையில் சீலாவுடனும் சம்பாஷிக்க அவனால் இயலவில்லை. எனவே, அவனைச் சந்திக்காமலேயே தன் வழியே சற்று தூரம் நடந்து சென்றான். அவன் மனமெல்லாம் சற்று முன் கேட்ட அச்சம்பாஷணையிலேயே லயித்திருந்தது. ஆனால், அச் சம்பாஷணையின் பரிதாபகரமான விளைவு வெகு சமீபத்திலேயே இருக்கிறதென்பதை அவன் உணரவில்லை.

ஆற்று மணலில் சிறிது நேரம் அமர்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்தவன், வீடு செல்லும் நினைவற்றுவிட்டான் போலும். அருகில் இருந்தது ஹரிஜனங்கள்



வசித்து வந்த சேரி. இரவு மணி எட்டுக்கு மேலாகிவிட்டது. சேரியின் நடுவிலிருந்து கிளம்பிக் காற்றில் மிதந்து வந்த கானம் அவனை எழுப்பியது. யார் பாடுவது?.... ...... சந்தேகமில்லை. பாலாவும் சீலாவும்தான். பகலெல்லாம் பாடுபட்டு வேலை செய்துவிட்டு வீடு திரும்பிய அவர்கள், இரவில் உணவருந்திப் படுக்கச் செல்லு முன் சிறிது நேரம் உல்லாஸமாகப் பாடிப் பொழுது போக்குகிறார்கள். பாட்டென்னவோ கேவலம் தெம்மாங்குதான். ஆனால், அதிலிருந்த இனிமை ஸ்ரீ நாராயணை வசீகரிக்கத் தவறவில்லை. வீடு திரும்பு முன் இவ்விளஞ் சகோதரர்களைப் பார்த்து வரலாமென எண்ணிப் புறப்பட்டான்.

சேரியை அணுகினான் அவன். இப்போது கேட்டது சீலாவின் குரல் மட்டும்தான். இதுவரை தமையனின் கூடவே பாடிவந்த பாலா, ஏதோ வீட்டுக் காரியத்தைக் கவனிக்க உள்ளே சென்றிருந்தாள். வாசலில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுக்கொண்டு படுத்திருந்த சீலா, இப்போது இன்னும் வலுத்த குரலில் பாடத் தொடங்கினான். பாவம்! சீலா! பாடு, பாடு, நன்றாய்ப் பாடு. உன் வாழ்க்கையில் இது தான் கடைசிப் பாட்டு.

சேரியின் ஒரு புறமாக அமைந்திருந்தது அச்சகோதரர்களின் குடிசை. பூலோக நரகம் போல் காட்சிதந்த அச்சேரியின் மத்தியில், பூலோக ஸ்வர்க்கம் போல் சுத்தமாகவும் அழகாகவும் நின்றது அக்குடிசை. ஒழுங்கற்ற அவ்வீடுகளின் நடுவிலெல்லாம் புகுந்து வழிகண்டுகொண்டு மேற்படி குடிசைக்கு எதிரில் வந்தவன், திடீரென்று சீலாவின் பாட்டு நின்றதைக் கண்டு ஒரு கணம் தானும் ஸ்தம்பித்தான். அதுமட்டுமல்ல, சீலாவின் வாயிலிருந்து புறப்பட்ட அந்த அமானுஷ்யமான அலறல்- அவனருகில் நின்றுகொண்டு மறுபடி கத்தியை ஓங்கும் அந்த பயங்கர உருவம்- எல்லாம் சேர்ந்து அவனைக் கதிகலங்கச் செய்தன. இவ்வளவும் கண்ணிமைக்கு முன் நடந்தவைதான். அதற்குள் பேச்சு மூச்சற்றுவிட்டான் சீலா.

அசைவற்று இரத்த வெள்ளத்தில் கிடக்கும் அவ்வுடலை ஒரு முறை குனிந்து நோக்கிவிட்டுப் பின்னால் நகர்ந்தது அவ்வுருவம். அவன் செய்தது கொலை என்பது ஸ்ரீ நாராயணுக்கு விளங்கிவிட்டது. ஆனால், தன் அருமைச் சகோதரன்போல் நேசிக்கப்பட்டு வந்த சீலாவின் மரணம், அவன் மனத்தில் பயம் ஏற்படுத்தவில்லை. அவனை இழந்துவிட்டோமென்ற உணர்ச்சியே அவனுக்குத் தானும் மரணத்தைப் பொருட்படுத்தாத துணிவைக் கொடுத்தது. கையில் கத்தியுடன் நிதானமாய்ப் பின் வாங்கும் அவ்வுருவத்தின் முன் சென்று வழியை மறித்தான். "அடே பாதகா! யார் நீ?" என்று கர்ஜித்தான். ஆனால், அவனுக்குப் பதில் தேவையில்லை. அம்மங்கின வெளிச்சத்தில்கூட பத்ராவை அவன் அடையாளங் கண்டுகொண்டான்.

கையிலிருந்த கத்தியைக் கீழே நழுவவிட்டான் பத்ரா. மின்னலைப் போல் பாய்ந்து அதை எடுத்துக் கொண்டுவிட்டான் ஸ்ரீ நாராயண். இடிமுழக்கம்போன்ற குரலில், "சீலாவை ஏனடா கொன்றாய்?" என்று கர்ஜித்தான்.

சாவதற்கு அஞ்சினவனல்ல பத்ரா. ஆனால் தன் சிறிய யஜமானனிடம் எப்பொழுதுமே அவனுக்கு உள்ள மரியாதை காரணமாகவோ என்னவோ அவன் பூனைபோல் ஒடுங்கி நின்றான். அவன் குரல் நடுங்கியது. "எஜமான்-மன்னிக்கணும். நானாகச் செய்ததில்லை இந்தக் கொலை. பெரிய யஜமான்தான் என்னை இப்படி..." என்று குமுறினான். தன் காதுகளை நம்பவில்லை ஸ்ரீ நாராயண். தன் பிதாவால் தூண்டப்பட்டதா இக்கொலை? சீ! ஒரு காலும் இருக்கமுடியாது. தான் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு பொய் கூறுகிறான் இவன் என்றே சந்தேகித்துச் சீறினான். "அடே துன்மார்க்கா! இந்த அபாண்டமான பழியை என் தந்தை மீது சுமத்துகிறாயா? இன்று மாலை சீலாவுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்ததும், அவனைப் பழி வாங்குவதாக சபதம் செய்துவிட்டுச் சென்றதும் எனக்குத் தெரியாதென்று எண்ணினாயா? பாலாவை மணம் புரிந்துகொள்ள

உனக்கு என்ன தகுதியிருக்கின்றது?''

''இல்லை யஜமான். அதுவும்கூட பெரிய யஜமானின் யோஜனை தானுங்க. பாலாவை நான் கட்டிக்கிட்டு சீலாவையும் அழைச்சிக்கிட்டு இந்தப் பிராந்தியத்தை விட்டே வெளியேறிடனும்—அதுக்காவற பணச் செலவெல்லாம் தானே பொறுத்துக்கிடறேன் இன்னு சொன்னாங்க பெரியஐயா. அதுவுமில்லாமே, வெளியூரிலே எனக்கு நிலம் வேறே வாங்கித் தர்ரேன்னு சொன்னாங்க. எப்படி. யாச்சும் என் மகனுக்கும் அந்த தரித்திரக் கழுதைங்களுக்கும் சம்பந்தம் ஏற்படாமல் நீ பாத்துக்கிட்டாப் போதும்னு ஐயா எங்கிட்டச் சொன்னாரு.''

ஸ்ரீ நாராயண் பிரமித்து நின்றான். தான் சாதாரணமாக எண்ணிவந்த ஒரு விஷயத்தைத் தன் தந்தை எவ்வளவு தூரம் தப்பர்த்தம் செய்துகொண்டு அதற்கெதிராக சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக்கிறாரென்பதை அவன் உணர்ந்ததும், அவனது உணர்ச்சிவர்ணிக்கமுடியாததாயிற்று. ஆனால், அந்தக் கொலை? அதற்கும் அவர்தான் பொறுப்பாளியா?............

பத்ரா தன் கலவரத்தில் தூண்டுகோல் இல்லாமலேயே வார்த்தைகளைக் கொட்டிக்கொண்டிருந்தான். ''அப்படி அந்தக் கலியாணத்துக்கு அவுங்க சம்மதிக்காட்டிப் போனா முதல்லே சீலாவைத் தீர்த்துப்புடு. பாலா தன்னந் தனியாயிடுவா, கொஞ்ச நாளில் அவளையும் பலவந்தப்படுத்தி இழுத்துக்கிட்டு ஓடிப்போறதொண்ணும் கஷ்டமான காரியமில்லே. உனக்கும் அந்தமாதிரி அளகான பொண்ணு கிடைக்கணுமேன்னாரு. போதாததற்கு பணமும் நிலமும் வேறே. இதுக்கெல்லாம் ஆசைப்பட்டுக்கிட்டு நானும்...''என்று கைகளைப் பிசைந்தான் பத்ரா.

ஸ்ரீ நாராயண் விஷயங்களை ஒருவாறாகப் புரிந்துகொண்டான். 'இந்தப் பத்ராவின்மீது என்ன குற்றம்—உண்மைக் கொலையாளி வேறொருவனாயிருக்கும்போது?' என்ற எண்ணமே மேலிட்டது. தன்னையறியாமலே அவன் கை கத்தியை இறுகப்பற்றியது. ''பத்ரா, பயப்படாதே, என்னுடன் வா'' என்று கூறிவிட்டுத் தன் வீடு நோக்கி விரைந்து நடந்தான். நாய்போல் அவனைப் பின் தொடர்ந்தான் பத்ராவும்.

* * * *

அமைதியற்ற மனத்துடன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டிருந்தான் ஜயநாராயண். பத்ரா காரியத்தைச் சரியாக முடித்திருப்பானோ என்ற யோசனை போலும்! இரவு மணி 9-க்கு மேலாகிவிட்டது.

திடீரென்று அறைக்கதவு திறந்தது. பத்ரா பின் தொடரக் கையில் ரத்தம் சொட்டும் கத்தியுடன் உள்ளே நுழைந்தான் ஸ்ரீ நாராயண். இதை அவன் எதிர்பார்க்கவில்லையாயினும், திடசித்தனாகையால் சமாளித்துக்கொண்டான். தான் எவ்வளவோ எச்சரிக்கை செய்து அனுப்பியிருந்தும் பத்ரா முட்டாள்தனமாக ஸ்ரீ நாராயணிடமே அகப்பட்டுக்கொண்டுவிட்டானே என்று ஒரு புறம் எரிச்சல் ஏற்பட்டாலும், கத்தியில் ரத்தக் கறையைக் கண்டதும் 'சரி. வேலை முடிந்துவிட்டது போலிருக்கிறது' என்ற திருப்தியும் அதே சமயத்தில் உண்டாயிற்று. என்னே அவன் கல் நெஞ்சம்!

தந்தையின் முகத்தைவெறித்து நோக்கினான் ஸ்ரீ நாராயண். அவன் கண்களில் காணப்பட்ட உறுதியும் தீர்மானமும் தந்தையையே சற்று கலங்கச் செய்தன. இந்த ஆவேச ஸ்வரூபத்தினிடம் உண்மையை ஒளித்துப் பயனில்லை என்று உணர்ந்துகொண்டான் ஜயநாராயண். 'சரி. வருஷக் கணக்காக என் மனதில் அடைபட்டுக் கிடக்கும் ஒரு ரகசியத்தை இன்று வெளியிடுவது அத்யாவசியம்' என்று அவன் அந்தராத்மா கூறியது.

''தந்தையே! இந்தக் கொலைக்கு உண்மையில் தாங்கள்தான் பொறுப்பாளியா?'' என்று கடுமையான தோரணையில் கேட்டான் ஸ்ரீ நாராயண்.

''ஆம் மகனே!'' என்று தயங்காமல் பதிலளித்தான் ஜயநாராயண்.

''ஏன். இந்த நிரபராதியைத் தாங்கள் எதற்காகக் கொன்றீர்கள்?''

''மகனே! அவன் நிரபராதியல்ல. அவன் சகோதரியும் நிரபராதியல்ல. இவ்விருவரும் என்

மகனாகிய உனக்கும் என் வம்சத்துக்குமே சத்துருக்கள். என் கண் முன்பே என் வம்சத்திற்கு மாற்ற முடியாத இழுக்கு ஏற்பட்டு, அது அடியோடு நிர்மூலமாவதைப் பார்க்க நான் விரும்பவில்லை. அதனால்தான்......”

“தந்தையே! தாங்கள் சொல்வதன் பொருள்தான் என்ன? எனக்கு விளங்கவில்லையே.”

“ஸ்ரீ நாராயண், சற்றுப் பொறு சொல்கிறேன். இந்தச் சகோதரர்கள்பால் உன் மனம் நாடியதன் உண்மையை நானறிவேன். அதுதான் ரத்த பாசம் என்பது. அவர்களின் தந்தை யாரென்று ஒருவரும் அறியார். அந்த ரகசியம் இருவருக்கு மட்டும்தான் தெரிந்திருந்தது. அவ்விருவரில் ஒருவர் இவ்வுலகிலேயே இல்லை. அதுதான் அவர்களது தாயார். மற்றொருவன்......நான்தான். சிறு வயதில் ஒரு நாள் யௌவனத்தின் உணர்ச்சி எல்லைமீறிவிடவே, ஒரு ஏழை ஹரிஜனப் பெண்ணை வற்புறுத்தி என் விருப்பத்திற்கு இணங்கச் செய்தேன். அந்த சேர்க்கையின் பலன்தான் இச்சகோதரர்கள்......” இவ்விடம் ஒரு பெருமூச்சுடன் நிறுத்தின ஜயநாராயண் மறுகணம் மேலும் தொடர்ந்தான். “இம்மக்களை ஈன்றெடுத்த பின், தான் இறக்கும் வரையிலும் இவ்வுண்மையை யாருக்கும் வெளியிடாமல் என் மானத்தைக் காப்பாற்றினாள் அவ்வுத்தமி. ஆனாலும், அவள் கேவலம் ஹரிஜனப் பெண்தானே? சமூகத்தின் கட்டுப்பாட்டை மீறி அவளை நான் எங்ஙனம் அங்கீகரித்திருக்க முடியும்?

அதன் பின் விரைவிலேயே உன் தாயாரை மணந்துகொண்டேன். நீ பிறந்தாய். என் குலம் விளங்க நீ ஒருவன்தான் இருக்கிறாய். ஆனால், நீ அந்தப் பெண் பாலாவிடம் பழகின மாதிரி, எனக்கு விபரீதமானதாகப்பட்டது. சிறுவன் நீ. உனக்கு இவ்விரத்த பாசத்தின் மர்மம் அப்போது தெரியாது. இதை நீ தவறாக எண்ணிக்கொண்டு, அப் பெண்ணுடன் தகாத சம்பந்தம் வைத்துக்கொள்ளத் தொடங்கிவிடுவாயோ என்ற பயம் என்னை வாட்டினது எனக்கு ஒருவனுக்குத்தான் தெரியும்.

ஸ்ரீ நாராயண்! நீ என்போல் குறுகிய நெஞ்சமுள்ளவனல்ல. நீ படித்தவன். உலகத்தையும் சமூகத்தையும் நீ பொருட்படுத்தமாட்டாய். ஆனால், அந்தச் சமூகம் அதற்காக உன்னைச் சும்மா விடாது. இதை நான் நன்கறிவேன். சமூகம் ஏற்றுக்கொள்ளும் முறையில் எனக்குப் பிறந்த புதல்வன் நீ. அவர்கள் அப்படியல்ல. அதனால் அவர்களை விட அதிகமாக உன்னை நேசித்தேன். உன் நன்மைக்காக அவர்களைப் பலியிடத் துணிந்தேன். என்னை மன்னிப்பாய். நான் உன் தகப்பன்........” என்று தழுதழுத்த குரலில் கூறியவண்ணம் தனயனை நெருங்கினான் ஜயநாராயண்.

தன்னையறியாமல் பின் வாங்கி நின்றான் ஸ்ரீ நாராயண். அவன் அறிந்துகொண்ட ரகசியம் அவன் நெஞ்சைப் பிளப்பதாக இருந்தது. ஆனால், அதற்காக தன் தகப்பனை மன்னிக்கத் தயாராயில்லை. சொந்த மக்களையே கொலை செய்யத் துணியும் பாதகன் என்ற வெறுப்புணர்ச்சி ஓர்பால் எழுந்தது. தன் உணர்ச்சிகளை வெளியிடாமல், அடக்கமான குரலில் கூறினான். “உம்மை இனி என் தந்தை என்று கூறிக்கொள்ளவே எனக்கு மனமில்லை. சுய நலத்தின் பொருட்டு நியாய உணர்ச்சியைத் துறந்துவிட்டீர். சமூகத்திற்கஞ்சி மனச்சாக்ஷியைப் பலியிட்டுவிட்டீர். நீர் கொலைகாரர். என்றாலும், என்னைப் பெற்றவர் என்ற முறைக்காக உம்மைக் காட்டிக்கொடுக்க என் மனம் துணியாது. ஆனால், எவர் பொருட்டு இத்தனை அக்கிரமங்கள் செய்யத் துணிந்தீரோ, அதே மகன்கூட உம்மை வெறுத்து ஒதுக்கிவிட்டான். இதைத் தெரிந்துகொள்ளும். நான் போய் வருகிறேன். நமஸ்காரம்” என்று கூறிவிட்டு வாசற்புறம் நோக்கி நடந்தான். அந்த ரத்தம் தோய்ந்த கத்தி இன்னும் அவன் கையிலேயே இருந்தது.

ஜயநாராயணுக்கு ஒரு நிமிஷ நேரம்வரை ஒன்றும் தோன்றவில்லை. சுவரைப் பிடித்துக்கொண்டு ஸ்தம்பித்து நின்றுவிட்டான். சுய உணர்வு வந்ததும் “ஹா! ஸ்ரீ நாராயண்!” என்று அலறியவண்ணம் இருளில் வெளியே ஓடினான். தன் மகன் எங்கே போயிருக்கக்கூடுமென்பதை அவன் நன்கறிவான். ஆயினும் என்ன? ஸ்ரீ நாராயண் முந்திக்கொண்டான். ஊர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, அங்கிருந்த அதிகாரியிடம் அக்கத்தியை ஒப்படைத்துவிட்டுத் தான்தான் கொலை செய்திருப்பதாக ஒப்புக் கொண்டுவிட்டான் அவன். அவனை ‘லாக் அப்’பில் வைக்கும் சமயம், அழுதுகொண்டும் அரற்றிக் கொண்டும் அங்கு ஓடிவந்த தகப்பனைச் சந்திக்கவே மறுத்துவிட்டான்.

* * * *

பித்துப் பிடித்தவன் போல் நள்ளிரவில் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான் ஜயநாராயண். அவன் வாழ்க்கை சிதறிவிட்டது. சேரியின் சமீபம் அவன் வந்தபோது பாலாவின் அழுகுரல் கேட்டது. தமையனது உயிரற்ற உடலின் மேல் விழுந்து புலம்பிக்கொண்டிருந்தாள் அவள்.

அழுகுரல் வந்த திசையை நோக்கி விரைந்து சென்றான் ஜயநாராயண். சவத்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்த சேரி ஜனங்களெல்லாம் “பெரிய யஜமான், பெரிய யஜமான்” என்று முணுமுணுத்த வண்ணம் விலகி வழிவிட்டனர். நேராக வந்து ரத்த வெள்ளத்தில் கிடக்கும் அவ்வுடலின்மீது தானும் விழுந்து அரற்றத் தொடங்கினான். தன் மகன்—தன்னாலேயே கொலையுண்டவன்—அங்கு சிந்திக் கிடப்பதெல்லாம் தன் இரத்தம் என்ற உணர்ச்சி இந்தக் கடைசி நிமிஷத்திலாவது அவன் மனத்தில் ஊற்றெடுத்தது.

சுற்றி நின்ற சேரி ஜனங்கள் விழித்தனர்—யஜமானுக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லையோ என்று. ஆனால், அவர்கள் எல்லாம் பாமரர்கள். “அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்” என்ற வள்ளுவர் வாக்கை அவர்கள் அறிவார்களா?

அந்தஸ்து உயர்ந்தது

பிரபாவதி

கௌஸல்யா தனது தங்கை விமலாவின் பிரஸவத்துக்காக உதவிபுரிய வந்திருந்தாள். விமலாவுக்கு ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. ஏற்கெனவே அவளுக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்திருந்தன. எனினும் முதல் தடவையாகப் பிறந்த பெண் குழந்தை அதுவாதலால், அவள் அச்சமயம் அடைந்த பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை.

பிரஸவித்த ஸமயம் விமலா பம்பாயில் தன்னுடைய கணவனுடன் இருந்தாள். அவள் கணவன் துரைசாமிக்கு அங்குள்ள ஒரு பெரிய பஞ்சாலையில் ஒரு பெரிய உத்தியோகம். ஆயிரம் ரூபாய் சம்பளம்–பங்களா வேலைக்காரர்கள் — தடபுடலாய் வாழ்க்கை நடத்திவந்தார். விமலா நல்ல அழகி. வைரமும் பொன்னும் அவள் உடம்பின்மீது ஆபரண ரூபமாக ஆயிரக்கணக்கான மதிப்பில் ஏறியிருந்தன. பணத்திலும் பவிஷுலும் பிரேமை கொண்டவள் அவள். ஏழ்மைத்தனத்தைக் கண்டால் அவளுக்கு வெறுப்பு. யாரேனும் ஏழை உறவினர்களைக் கண்டால், அவள் முகம் கொடுத்து பேசமாட்டாள். அவர்களை உறவு என்று சொல்லிக் கொள்ளவும் வெட்கப்படுவாள். கௌசல்யாவுக்கு ஒரே பெண் தான். சுந்தரி இரண்டு வயது குழந்தையாயிருந்தபொழுதே அவளது தந்தை இறந்துவிட்டார். சுந்தரியை வளர்க்கும் பொறுப்பு அவளது தாய் கௌஸல்யாவுக்கு ஏற்பட்டுவிட்டது. கணவன் இளம்பிராயத்திலேயே இறந்துவிட்டபடியால், அவன் அதிகம் சம்பாதித்து வைத்துவிட்டுப் போகவில்லை. அவள் தந்தையுடனும், தம்பிகளுடனும் அவிபக்த குடும்பமாக இருந்தாள். விதவையான கௌஸல்யாவின் ஜீவனும்சத்துக்கும் குழந்தை சுந்தரியின் போஷணைக்கும் விவாகத்துக்குமாக அவளது மாமனாரிடமிருந்து அவளுக்கு 5000 ரூபாய் கிடைத்தது, அத்தொகையில் ஆயிரம் ரூபாய்க்கு அவள் ஒரு சிறு வீட்டை வாங்கிக்கொண்டு பாக்கி பணத்தை வட்டிக்குக் கடனாகக் கொடுத்திருந்தாள். சுந்தரியின் விவாகத்துக்குள் அது மூன்று மடங்காய் பெருகும் என்று அவள் எதிர்பார்த்தாள்.

பொல்லாத காலம் பாவம் அவளுக்கு! சுந்தரிக்குப் பதினுன்காம் வயது நடந்தபோது அவள் கடன்காரருக்கு ஏற்பட்ட நஷ்டத்தால் கடனை திருப்பிக் கொடுக்க அவர்களால் இயலவில்லை. இன்சால்வெண்டாகிவிட்ட அவர்களிடமிருந்து முதலாவது வருமோ என்று சந்தேகம் வந்துவிட்டது. இதே நிலைமையில்தான் கௌசல்யா தன் பெண்ணுடன் தனது தங்கையின் விமலாவின் பிரஸவத்துக்கு பம்பாய் சென்றிருந்தாள். நல்ல செயலில் இருந்த தனது தங்கை புருஷன் துரைசாமி, தன்பெண்ணை நல்ல இடத்தில் விவாகம் செய்து கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று நினைத்தாள்.

துரைசாமி நல்ல மனிதர்தான். ஆனால், தடபுடலாய் பணத்தைச் செலவு செய்து ஆடம்பர வாழ்க்கையை நடத்திய அவருக்கு, கையிருப்பு ரொக்கம் பூஜ்யமென்றே சொல்லவேண்டும். மேலும், அவருக்கு இப்பொழுது ஒரு பெண்குழந்தை பிறந்துவிட்டது. செலவும் அதிகமாய் ஏறிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் அவர் சுந்தரியின்விவாகத்தை நடத்திவைக்கும் பொறுப்பையும் செலவையும் எப்படி ஏற்றுக் கொள்வார்? ஏதோ சாக்குபோக்குகள் சொல்லி தட்டிக்கழித்து விட்டார். விமலாவிடம் அவர் நூறு ரூபாயைக் கொடுத்து, "இதை உன் அக்காவிடம் கொடு, ஏதோ நிலைமைக்குத்தக்க இடம்பார்த்து கல்யாணம் செய்துவிடச்சொல், இரண்டாயிரம், மூவாயிரம் என்று வரதட்சிணை கொடுக்க அவளால் இயலாது. ஆதலால், இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொடுத்தால் நல்லது. சுந்தரியும் அதிர்ஷ்டசாலியாகவே இருப்பாள். செலவும் குறைவாகவே இருக்கும்" என்று உபதேசித்தார்.

ஏமாற்றத்துடனும், வருத்தத்துடனும் கௌஸல்யா தன் ஊருக்குத் திரும்பினுள்.

2

பதினுன்கு வருடங்கள் ஆகிவிட்டன. விமலாவின் செல்வக்குமாரத்தி சண்பகாவுக்கு கலியாணம். பெரிய இடத்து சம்பந்தம். மணமகனின் தகப்பனுர் மதுரையில் பிரபல வக்கீல். ஆயிரக்கணக்கான சம்பாத்தியம் அவருக்கு. வக்கீல் ரங்கப்பாவின் மூத்த பிள்ளை 'ராஜா' பெயருக்கு ஏற்ற

வடிவழகுள்ளவன். கலாசாலைப் படிப்பை முடித்துவிட்டு, சட்டப் பரீட்சைக்கு படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு மாலையிடுவதற்கு எவ்வளவோ அதிர்ஷ்டம் பெற்றிருக்க வேண்டும். சண்பகா அதிர்ஷ்டசாலிதான்.

கல்யாணம் தடபுடலாய் நடந்தது. பதினாயிரக்கணக்கில் பணம் செலவாயிற்று. துரைசாமியும், விமலாவும் தங்கள் செல்வ குமாரத்தியின் விவாக விஷயத்தில் செலவைப்பற்றி அக்கரைகொள்ளுவார்களா, என்ன? அதுவும் பெரிய இடத்து சம்பந்தம் அவர்களுக்கு வாய்த்த பின்.

பெரிய கொட்டகைப் பந்தல், மின்சார ஜாலவர்ண தீபாலங்காரம், பாட்டுக் கச்சேரி, பரத நாட்டியம், ஹரிகதை, ஊர்வலம், பிரமாதமான விருந்துகள் இவற்றில் ஒவ்வொன்றையும் வருணிப்பதென்றால் சாத்தியமல்ல. ஊரிலுள்ளவர்கள் எல்லாரும் மூக்கில் விரலை வைக்கும்படி அவ்வளவு பிரமாதமாக இருந்தது விவாக விழா.

கல்யாணத்தின்பொழுது ஒவ்வொரு விஷயத்திலும் விமலா, "அக்கா!" "அக்கா" என்று யோசனை கேட்பதற்கு ஓடுவாள். அந்த "அக்கா" விமலாவுடன் கூடப் பிறந்த சகோதரி கௌஸல்யா அல்ல. அவள் வேறு யாருமல்ல. விமலாவின் பெரிய தகப்பனாரின் பெண் குட்டியம்மாள்தான்.

குட்டியம்மாளுக்கு வயது ஐம்பது இருக்கும். அவள் கணவனுக்கு டிபுடி கலெக்டர் உத்தியோகம். அவளுடைய புத்திரன், ஐ. சி. எஸ் பரீட்சை தேறிவிட்டு டில்லியில் மத்திய சர்க்காரின் இலாகாக்களில் ஒன்றில் நல்ல பதவி வகித்து வந்தான். ஜரிகை புடவை உடுத்தி வைர நகைகள் டால் வீச சிறு பெண்யானை போல் கம்பீரமாய் கல்யாண மகோத்ஸவத்தில் தோற்றமளித்த குட்டியம்மாளை தனது "அக்கா"வென்று சொல்லிக்கொள்வதில் விமலாவுக்கு எவ்வளவோ பெருமை. அத்திம்பேரான டிபுடி கலெக்டரும் பிள்ளையான ஐ. ஸி. எஸ். ஸாரும் கல்யாணத்துக்கு வந்திருந்தால் அவளுக்கு இன்னும் எவ்வளவோ அதிகமான பெருமை ஏற்பட்டிருக்கும். ஆனால், அவர்களுக்கு ரஜா இல்லாததால் அவர்கள் வர இயலவில்லை.

ஸ்திரீகளது பந்தியில் மட்டும் ஜரிகையும் வைரமும் சுடர்விட்டு மின்னுகையில், அவர்களுக்கு திருஷ்டி பரிகாரம்போல் ஒரு மூலையில் ஒருத்தி விதவை கோலத்துடன் நின்றுகொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் இருந்தவள் பத்து வயது சிறுமி. அழுக்குப் பாவாடை, கிழிந்த சொக்காய், பழசாய் போன தாவணி. இத்யாதி உடையுடன் நின்ற சிறுமி நல்ல அழகி. சேற்றில் முளைத்த செந்தாமரைபோல் இருந்தாள்.

விதவை வேறு யாருமில்லை. விமலாவின் கூடப்பிறந்த கௌஸல்யா தான். அவள் பக்கத்தில் இருந்த சிறுமி அவளது பேத்தி பத்மாக்ஷி. ஆம்: சுந்தரியின் பெண்தான்.

கௌஸல்யா தன் பெண் சுந்தரியை ஒரு ஏழை பள்ளிக்கூட உபாத்தியாயருக்குக் கல்யாணம் செய்துகொடுத்திருந்தாள். சுந்தரி கணவனுடன் வெகுநாட்கள் குடியும் குடித்தனமும் நடத்தவில்லை. ஒரே பெண் குழந்தையை விட்டுவிட்டு, அவள் கண் மூடிவிட்டாள். அக்குழந்தை கௌஸல்யாவிடமே வளர்ந்து வந்தது.

கடன்காரர்களிடமிருந்து கௌஸல்யாவுக்கு ஆயிரத்தைந்து ரூபாய் திரும்பி வந்தது. இச்சிறு தொகையை வைத்துக்கொண்டு தான் அவள் கஷ்டமான ஜீவனம் நடத்தினாள். எவ்வளவு ஏழ்மை ஸ்திதியில் இருந்தபோதிலும் தன்னுடைய தங்கையிடமும் அவளது கணவனிடமும் உதவிபெறக் கூடாது என்பது அவள் திடமான சங்கல்பம். சுந்தரியின் புருஷன்



இரண்டாவதுதாரத்தை மணந்து, அவள் மூலம் அவனுக்கு நாலைந்து குழந்தைகள் உண்டாகி, அவனது குடித்தனமும் செலவும் பெருகிய படியால், அவனும் யாதொரு தொகையும் கௌஸல்யாவுக்கு அனுப்ப இயலவில்லை. அவனிட மிருந்து அவள் யாதொரு உதவியையும் எதிர்பார்க்கவுமில்லை.

கல்யாணத்துக்கு வந்திருந்த கௌஸல்யாவையும் அவள் பேத்தியையும் விமலா இழிவுடன் நடத்தவில்லை. எனினும் அவர்கள் தனது அக்கா! 'அக்காவின் பேத்தி' என்று சொல்லிக் கொள்ள அவள் வெட்கப்பட்டாள். இது கௌஸல்யாவுக்குத் தெரியாத விஷயமன்று. அவளும் தனது தங்கைக்கு மனக் கலக்கம் ஏற்படாதவண்ணம் நடந்து கொண்டாள்.



3

கல்யாணத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் அங்கு வந்திருந்த ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டிருந்தார் சம்பந்தி ரங்கப்பா. சிறுமி பத்மாக்ஷியும் அவளது பாட்டி கௌஸல்யாவும் அவர் திருஷ்டியில் சிக்காமல் போய்விடுவார்களா என்ன? துரைசாமியை அழைத்து அவர் அந்தச் சிறுமியைக் காட்டி "அவள்யார்" என்றுகேட்டார். துரைசாமி அலட்சியமாய் "தெரியாது" என்றார். ஆனால், ரங்கப்பா வேறு மனிதர்களை பக்குவமாய் விசாரித்து அவர்கள் யார் என்பதை அறிந்து கொண்டார். அவர்களைப்பற்றி அவர் அக்கரை கொள்ளுவதற்கு காரணமும் இருந்தது.

ஆறு வருடங்களுக்குப்பின் கௌஸல்யாவின் வீட்டு வாசலில் ஒரு மோட்டார் வண்டி நின்றது. அதிலிருந்து இறங்கி வந்தவர் யாராக இருக்கலாம் என்று வியப்புடன்நின்றஅவள், தனது தங்கை விமலாவின் சம்பந்தி ரங்கப்பா தன்னிடம் மரியாதையுடன் வந்ததைக் கண்டு பிரமையடைந்தாள். அவரைப் பின் தொடர்ந்த அவர் மனைவி கையில் புஷ்பம், பழம், பாக்கு வெற்றிலை, கற்கண்டு இவை நிரம்பின வெள்ளித் தட்டை ஏந்தியிருந்தாள்.

அவர்களை தகுந்த பிரகாரம் முகமன் கூறி உபசரிக்கவும் செயலற்றவளாய் நின்றாள் கௌஸல்யா. கூடத்தில் ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த பத்மாக்ஷியும் வியப்படைந்தாள். பாட்டியின் பக்கத்தில் போய் நின்றுகொண்டு வந்தவர்களின் காரியம் என்னவென்பதை அறிய ஆவல் கொண்டாள்.

கூடத்திற்குள் பிரவேசித்தனர் தம்பதிகள். ரங்கப்பா ஊஞ்சலில் உட்கார்ந்தார். அவர் மனைவியைப் பார்த்து கௌஸல்யா "சம்பந்தியம்மா சௌக்கியமா? மாப்பிள்ளை க்ஷேமமாய் இருக்கிறாரா? சண்பகம் உங்கள் ஆத்தில் இருக்கிறாளா? அல்லது பிறந்தாத்துக்குப்போய் இருக்கிறாளா?" என்று கேட்டாள்.

சம்பந்தியம்மாள் "பெருமாள்கிருபையால் எல்லாரும் சௌக்கியம். சண்பகா எங்காத்தில்தான் இருக்கிறாள்" என்று கூறிவிட்டு, பத்மாக்ஷியை நோக்கி, "இந்தா அம்மா இந்தத் தட்டை வாங்கிக்கொள்" என்றாள்.

தேவ கன்னிகையைப் போல் விளங்கிய பத்மாக்ஷி, முதலில் ரங்கப்பாவை நமஸ்கரித்துவிட்டு,, பின்னர் அவரது மனைவியையும் நமஸ்கரித்துவிட்டு, தட்டை வாங்கிக்கொண்டாள். அப்பொழுது கடிகாரத்தில் மணி அடித்தது. எங்கிருந்தோ மங்கள வாத்ய கோஷமும் தொனித்தது. ரங்கப்பா மகிழ்ச்சியுடன், "நாங்கள் வந்த ஸமயம் நல்ல சமயம் தான். சகுனம் ரொம்பவும் திருப்திகரமாய் இருக்கிறது" என்றார்.

கௌஸல்யா, அவர் மேலே என்ன கூறப்போகிறாரோ என்பதை எதிர்பார்த்தவண்ணம் சம்பந்தியம்மாள் பக்கம் நின்று கொண்டிருந்தாள்.

ரங்கப்பா "குழந்தை நல்லபுத்திசாலி. இவளை நான்முன்னதாகவே கவனித்திருக்கிறேன். இவளுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் ஆக வேண்டும் என்று நான் முதலிலேயே ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். இவள் ஜாதகமும் என் இரண்டாவது பிள்ளை சுந்தரத்தின் ஜாதகமும் எல்லா விதங்களிலும் பொருந்தியிருக்கின்றன. உங்களுக்கும் உங்கள் பேத்திக்கும் இஷ்டமானால்—" என்று நிறுத்தினார்.

கௌஸல்யா திடுக்கிட்டாள். அதிர்ஷ்டம் இப்படி வலுவில் தன் வீட்டை நாடிவரும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. சுந்தரம் நல்ல பையன்தான். நல்ல படிப்பாளி, அழகன். ஆனால் —அந்தோ-பிறவியிலிருந்தே அவனுக்கு ஒரு கால் ஊனம்.

அவள் முகத்தில் தோன்றின குழப்பத்தைக்கவனித்தரங்கப்பா பகவான்சுந்தரத்துக்குஎல்லாவித பாக்கியத்தைக் கொடுத்திருந்தாலும் அதற்குத் திருஷ்டி பரிகாரமாக ஊனத்தையும் கொடுத்திருக்கிறார். அவன் ரொம்பவும் கெட்டிக்காரன். வீட்டிலிருந்துபடித்தே பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறான். எப்பொழுதும் ஏதேனும் படித்துக்கொண்டே இருப்பான். நல்ல அழகு, நல்ல குணசாலி. அவனது கால் ஊனத்தை உங்கள் பேத்தி பொருட் படுத்தாவிட்டால், அவன் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறான் என்றார். பத்மாக்ஷி சுந்தரத்தை மணக்க சம்மதித்துவிட்டாள். விவாகம் ஆடம்பரமின்றி நடைபெற்றது.

நிலைமை மாறிவிட்டபின், விமலாவுக்கு கௌஸல்யாவை அக்கா என்று கூப்பிட்டு பெருமை பாராட்ட தயங்குவாளா என்ன? கௌஸல்யா பிரபல வக்கீல் ரங்கப்பாவின் ஸம்பந்தியம்மாளாகி விட்டபின், அவளது அந்தஸ்து உயர்ந்து விட்டதன்றோ! குட்டியம்மாளைப் போல் கௌஸல்யாவும் விமலாவுக்கு அக்காவாய் விட்டாள்.

இப்பொழுது ரங்கப்பாவின் மாளிகையில் சாக்ஷாத் லக்ஷ்மியைப்போல் விளங்குகிறாள், அவரது மூத்த நாட்டுப்பெண் சண்பகா. அதேசமயம் அவரது இடுப்பில் ஏறிக்கொண்டு அவரது சிரிப்பையும், அன்பையும் ஸ்வீகரிக்கும் குழந்தை சாக்ஷாத் பாலகிருஷ்ணனைப்போலே விளங்குகிறது யார் தெரியுமா? கௌஸல்யாவின் பேத்தி பத்மாக்ஷியின் சீமந்த புத்திரன்தான். சண்பகாவுக்கு இன்னும் புத்திரபாக்கியம் ஏற்படவில்லை.

சமீபத்தில், ஸெக் தூதரின் மனைவி டில்லி வந்திருந்தார். அவர், கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் பெண்ணும் தேவதாஸ் காந்தியின் மனைவியுமான ஸ்ரீமதி லட்சுமி தேவதாஸுடன் சம்பாஷித்தார்.

கதலீபுர நாடகம்

அத்தியாயம் [illegible]

ராவ்பகதூர் பயங்கரம் அவர்களின் இல்லத்திற்குப் புதிதாக ஒரு இளைஞன் வந்து சேர்ந்தான். அவன் தான் ராவ்பகதூரின் சீமந்த குமாரனும் சென்னையில் இண்டர்மீடியட் பரீக்ஷை எழுதிவிட்டு வந்திருப்பவனுமான சிரஞ்சீவி பாலுசாமி. பாலுசாமிக்கு அவனுடைய தந்தையிடம் பிரமாத கோபம். மாதம் ஐம்பது ரூபாய் அனுப்பிவிட்டு, 'உன்னுடைய செலவையெல்லாம் இதற்குள்ளேயே பார்த்துக்கொள்' என்று அவனுடைய தந்தை எழுதுவது வழக்கம். மாதச் செலவு அவனுக்கு நூறு ரூபாய்க்கு மேல் ஆகுமாதலால், தன் நண்பர்களிடமெல்லாம் ஏகப்பட்ட கடன் வாங்கிக்கொண்டிருந்தான்.

'என்னடா தடிப் பயலே! உங்க புரொபஸர் மூஞ்சியிலே ஏண்டா அழுகல் வாழைப்பழத்தை விட்டெறிஞ்சே?' என்று விசாரணை செய்தார் ராவ்பகதூர்.

'அழுகல் வாழைப் பழமாக இல்லாவிட்டால் எதற்காக விட்டெறியப் போகிறேன்?' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான் பிள்ளையாண்டான். 'ஏன்? அவர் ஒரு நாள் நான் கிளாஸிலே தூங்கிக்கொண்டிருந்தேன் என்பதற்காக என் மூஞ்சியிலே சாக்பீஸை விட்டெறியலாமா?' இதைச் சொல்லும்போது பாலுசாமியின் முகம் சிவந்தது. அவனைத் தூக்கத்திலிருந்து சாக்பீஸை எறிந்து எழுப்பும் பழக்கம் பலன் தரக்கூடியதாயிருந்தாலும் அவனைப் பொறுத்த வரையிலும் விரும்பத்தக்கதல்ல. 'மாணவர்கள் பார்லிமெண்'டில்கூட புரொபஸர், தூங்கும் மாணவர்களை எழுப்பக் கையாளும் முறைகளைக் கண்டித்து ஒரு மசோதாவை நிறைவேற்ற எண்ணியிருந்தான்.

'பிரின்ஸிபாலிடம் சொல்லி, உன்னைக் காலேஜுக்கு வெளியே விரட்டியிருந்தால் என்ன செய்வே?'

'பிரின்ஸிபால் ரொம்ப தமாஷான பேர்வழி. இந்த வாழைப்பழ சமாச்சாரத்தை அவரிடம் யாரோ பையன் சொல்லி, அவருக்குத் தெரிந்து போய்விட்டது. அதைக் கேள்விப்பட்டவுடன் அவருக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லையாம். ரொம்ப துணிச்சலான பையன்; முன்னுக்கு வர வேண்டியவன் என்றுகூட எனக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தாராம்!...'

பயங்கரத்திற்குக் கோபம் வந்துவிட்டது. 'ஓகோ! அதற்காகத் தினம் வண்டிக்கணக்கில் வாழைப்பழம் வாங்கி புரொபஸர்கள் மீது எறிவதாக உத்தேசமா?'

பாலுசாமி உஷாரானான். 'ஏதோ தெரியாத்தனமாகச் செய்துவிட்டேன்...'

'தொலைகிறது. பரீக்ஷையாவது நன்கு எழுதியிருக்கிறாயா?'

பாலுசாமி தலையைப் பலமாக ஆட்டினான். பயங்கரம், தினசரிப் பத்திரிகையைப் புரட்ட ஆரம்பிக்கவே, மெதுவாக அந்த இடத்தை விட்டு நழுவினான்.

'என்ன மிஸ்டர் பாலு! காலேஜ் வாத்தியார் மேலே எலுமிச்சம் பழத்தையோ என்னமோ விட்டெறிஞ்சேளாமே?' என்று பரிவுடன் விசாரித்தான் சேகரன்.

'இல்லை, ஸார்!'

'என்ன இல்லை! நீங்கள் எறியவில்லையா?'

'எறியவில்லை என்று யார் சொன்னது? எலுமிச்சம் பழம் இல்லை என்கிறேன். வாழைப் பழம்.' பாலுசாமியின் முகத்தில் சாகுந்தலத்தை எழுதி முடித்துவிட்டு, பரதவாக்கியத்தை எழுதும் காளிதாஸனின் முகக் காந்தி மின்னியது.

'பேஷ்! அது புத்திசாலித்தனம்தான்!' என்று ஆமோதித்தான் சேகரன். 'நான் படிக்கும்போது பையன்கள் இவ்வளவு தூரம் முன்னேறவில்லை. சும்மா ஏரோப்ளேன் பண்ணி விடுவது, வாத்தியார் மேஜை மேல் தவளையைப் பிடித்துப் போடுவது என்று இருந்தது. இப்போ ரொம்ப 'அட்வான்ஸ்' ஆகியிருக்கு!......அது சரி, பரீக்ஷையில் உங்களுக்கு முதல் வகுப்பு கிடைக்குமா?''

'முதல் வகுப்பா?...யாருக்குக் கேட்கிறீர்கள். எனக்கா?...இங்கிலீஷ் பேப்பர் எல்லாவற்றிலும் ஸ்ரீராம ஜயம் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். குறைந்த பட்சம் ஐயாயிரம் ராம நாமாக்களாவது எழுதியிருப்பேன்...'

'பேஷ்! இகவாழ்வுக்கு எப்படியிருந்தாலும் பரவாழ்வுக்கு ரொம்ப பிரயோஜனப்படும்! எல்லாப் பரீக்ஷையிலும் இப்படியேதான் எழுதியிருக்கிறீர்களா?'

'எல்லாவற்றிலும் அப்படி எழுதவில்லை. ஒரு 'வெரைட்டி' வேணுமோன்னோ? கணக்குப் பேப்பர்களில் கடவுள் துணை, ஸம்ஸ்கிருத பேப்பரில் 'சுக்லாம்பரதரம் விஷ்ணும்' என்று நூறு தடவை...'

சேகரன் கதலீபுரத்தைப்பற்றித் தான் வந்த தினத்தன்று உண்டுபண்ணிக்கொண்ட அபிப்ராயங்களை முழுவதும் மாற்றிக்கொண்டான். 'என்ன முட்டாள்தனம்! இவ்வளவு காமெடியன்கள் இருக்குமிடத்திலா பொழுது போவது கஷ்டம் என்று நினைத்தேன்?' என்று மனதில் எண்ணிக்கொண்டான்.

''அது கிடக்கட்டும், மிஸ்டர் சேகர்! ஒரு ஐந்து ரூபாய் பணம் இருந்தால் கொடுங்கள். அந்த 'ஓல்ட் இடியட்'டை (அப்பாவை)க் கேட்டால் சண்டைக்கு வந்துவிடும்'' என்று மெதுவாக சேகரிடம் ஐந்து ரூபாய்க்கு அடிபோட்டான்.

''பேஷாய்! அதற்கு இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியதில்லையே!'' என்று சொல்லிவிட்டு சேகரன் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினன்.

பாலுசாமியின் வாழ்க்கையிலேயே இது முதல் சம்பவம். அதாவது, அவன் கேட்டவுடன் அதிக கெடுபிடி இல்லாமல் கேட்ட தொகையைக் கொடுக்கும் வழக்கம். சேகரனைப்போல தயாள குணம் படைத்தவர்கள் இன்னும் ஒரு டஜன் இருந்தால் இந்த உலகம் எப்படி யெல்லாம் இருக்கும் என்று மானஸிகமாக ஒரு கற்பனை உலகத்தைச் சிருஷ்டி செய்து பார்த்தான் பாலுசாமி. சேகரிடம் அவனுக்கு அன்பு, நட்பு, பக்தி எல்லாமே ஏற்பட்டது. 'எங்கே, பாலு! தென்னை மரத்தில் ஏறிக் குதி பார்க்கலாம்' என்று சேகர் சொன்னல், உடனே அதைக்கூட செய்யத் தயாராயிருந்தான் பாலுசாமி.

ராவ்பகதூர் பயங்கரம், இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் போன்ற எதிர்ப்புப் படைகள் இருக்கும் இடத்தில் பாலுவைப் போன்ற உதவியாளர் ஒருவர் தேவைதான் என்று சேகரனுக்குத் தோன்றியது.

இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் ஏதோ லாப நஷ்டக் கணக்கு போட்டுப் பார்த்துக்கொண்டிருந்தான். கழுத்தின் மீது ஏதோ பாரம் அழுக்குவதைக் கண்டு திரும்பிப் பார்த்தான். சிரஞ்சீவி சீமாச்சு தன் கழுத்துக்கு ஆபரணமாக அமர்ந்திருப்பதைக் கண்டான்.

'உனக்குத் தெரியுமா அத்தான், இந்த சமாச்சாரம்?'

'எந்த சமாச்சாரம்டா? கழுத்தை விட்டு விட்டுச் சொல்லு. கழுத்தை நெறித்துவிடுவாய் போல இருக்கே! நானே இன்னும் இன்ஷ்யூர் பண்ணிக்கொள்ளவில்லை...'

'அன்னிக்கு ஒரு நாள் அக்காவும், எங்க பிரைவேட் வாத்தியாரும் தோட்டத்திலே 'ஹோ'ன்னு சிரிச்சா......''

'என்னைப் பார்த்துட்டா?' என்று குறுக்கிட்டான் நடராஜன். அவனுக்குக் கொஞ்ச நாட்களாய் (இன்ஷ்யூரன்ஸ் ஏஜென்ஸி எடுத்துக்கொண்ட நாள் முதல்) அவனைக் கண்டு எல்லோரும் சிரிப்பதாய் ஒரு பிரமை ஏற்பட்டிருந்தது.

'அது எனக்குத் தெரியாது. இப்பவும் அவா ரெண்டுபேரும் தோட்டத்திலே சிரிச்சிண்டிருக்கா. எங்க வாத்தியார் சிரிக்கும்போது எனக்குப் பிடிக்கவேயில்லை...' சீமாச்சுவுக்கு சேகரனிடம் சொந்த மனஸ்தாபங்கள் இருந்தன.

நடராஜனுக்கு என்னவோ சீமாச்சுவிடம் பற்றுதல் ஒன்றும் கிடையாது. ஆனல், சேகரின் சிரிப்பைப் பற்றி அவன் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டவுடன், சீமாச்சுவின் ரஸிகத் தன்மையில் மிகுந்த நம்பிக்கையும், சீமாச்சுவிடம் கிட்டத்தட்ட அன்பு என்று சொல்லும் படியான ஓர் உணர்ச்சியும் ஏற்பட்டது. நடராஜன் உடனே எழுந்து ஒருவருக்கும் தெரியாமல் தோட்டத்துப் பக்கம் சென்று மறைவில் நின்றுகொண்டான்.

'எங்க அத்தானிடம் ஒரு மணி நேரம்கூட யாரும் பொறுமையாகப் பேசிக்கொண்டிருக்க முடியாது......'

'ஒரு மணி நேரமா? ஐந்து நிமிஷ நேரம் போதும். அதற்குள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் ப்ராஸ்பெக்டஸ், பிரீமியம் டேபிள் எல்லாம் அவனுக்கு நெட்டுருவாய்விடும்'

நடராஜன் காதில் இந்த வார்த்தைகளெல்லாம் தெளிவாக விழுந்தன. 'பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்று காத்திருந்தான் சம்பாஷணையின் தொடர்ச்சியைக் கேட்க.

'நான் சொல்றேன்னு கோவிச்சுக்கப் படாது. ஒருவன் பெரிய கொலை வழக்கில் அகப்பட்டுக் கொண்டு 'கொலைகாரன்' என்று ருஜுவாகி விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவனுக்கு ஆயுள் தண்டனையோ, தூக்கு மேடையோ வேண்டாம். ஒரு பக்கத்தில் உங்கள் அப்பா தன் கதையைப் படிக்க, இன்னொரு பக்கத்தில் நடராஜன் இன்ஷ்யூரன்ஸின் அனுகூலங்களை எடுத்துச் சொல்ல...அவன் செய்த குற்றத்துக்கு பாவம்! இது கடுமையான தண்டனைதான்!'

நடராஜனுடைய புத்திசாலித் தனத்தைப் பற்றியோ, அழகைப் பற்றியோ யாராவது பரிகாசம் செய்தால்கூட அவனுக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால், அவனுடைய 'பிஸினஸ்'ஸைப் பற்றி யார் பரிகாசம் செய்தாலும் அவனால் சகிக்கமுடியாது. அப்படிப் பரிகசித்தவன் எவனாயிருந்தாலும், அவனுடைய ஜன்மப் பகைவனாகி விடுவது திண்ணம். அதிலும் சேகரன், நடராஜன் எவ்வளவோ சொல்லியும்கூட கேவலம்

ஒரு இரண்டாயிரம் ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்துகொள்ள மறுத்தவன், அவனைப் பரிகாசம் செய்வதா? கோபாக்னியின் ஜ்வாலைகள் நடராஜனின் முகத்தில் படர்ந்தன. நன்றாய்க் காய்ந்து போயிருந்த வன்னிமரத்திற்கு நெருப்பும் வைத்தாகிவிட்டது.

சேகரனும், விசாலமும் மறுபடியும் சிரிக்கும் சப்தம் கேட்டது.

‘இனிமேல் கதலீபுரத்தில் சிரிப்பு இருக்காது. அல்லது நடராஜன் இருக்கமாட்டான்’ என்ற திடசங்கற்பத்துடன் நடராஜன் ராவ்பகதூர் பயங்கரம் அவர்களுடைய அறைக்குச் சென்றான்.

ராவ்பகதூர் நரஸிம்மம் தன் மேஜைமீதிருந்த சில கையெழுத்துப் பிரதிகளைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் பெருமிதம் தாண்டவமாடியது. எதிரில் திறந்தபடி பேனா வைக்கப்பட்டிருந்தது. பின்னால் காலடிசப்தம் கேட்கவே, நரஸிம்மம் திரும்பிப் பார்த்தார். மருமான் நடராஜன் நின்றுகொண்டிருந்தான்.

“வா, நடராஜா! இப்போதுதான் உன்னைப் பார்க்க வேணும் என்று நினைத்தேன்...இதைக் கொஞ்சம் கேளு...‘பார்வதி தன் வீட்டு மாடியில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்...’

‘தோட்டத்தில்...’ என்று குறுக்கிட்டான் நடராஜன்.

‘இல்லை, மாடியில்’ என்று திருத்திவிட்டு, பயங்கரம் கதையைத் தொடர்ந்தார். ‘அன்று தீபாவளியாதலால்,! மாடியெல்லாம் ஒரே நிலாவாக இருந்தது...’

‘தோட்டத்தில் ஒரு அதிசயத்தைப் பார்த்தேன்...’

‘கதையெல்லாம் மாடியில் நடக்கிறது என்று சொல்றேன். நீ என்னடா தோட்டத்தில், தோட்டத்தில் என்று அடித்துக்கொள்ளுகிறாய்?...மறுபடியும் படிக்கிறேன் கேளு’ என்று கடுமையாகச் சொல்லிவிட்டு, பயங்கரம் மறுபடியும் தன் கையிலிருந்த ஏடுகளில் கவனத்தைச் செலுத்தினார்.

‘தோட்டத்தில் ஒரு அதிசயத்தைப் பார்த்தேன்’ என்று அதே குரலில் திரும்பவும் சொன்னான் நடராஜன்.

‘அதென்ன அதிசயம்?’ என்று எரிச்சலுடன் கேட்டார் பயங்கரம்.

‘கதலீபுரத்தில் காதல் நாடகம் ஆரம்பித்திருக்கிறது. இதை நீடிக்காவிட்டால் ராவ்பகதூர் நரஸிம்மம், நாடகத்தின் பபூன் ஆகிவிடுவார்’

‘அதாவது, ஊரிலிருக்கிறவர்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள் என்கிறாயா? விவரமாய்ச் சொல்லு’

‘சேகரன் விசாலாக்ஷியிடம் நடந்துகொள்ளும் விதம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. விசாலாக்ஷியும் சிறிசோன்னோ அசட்டுத்தனமாக நடந்துகொள்கிறாள். அவள் தோட்டத்தில் தனியாக இருக்கும்போதெல்லாம் இவன் போய் பேச்சுக் கொடுக்கிறான். இரண்டு பேரும் தனியாகப் பேசிக்கொண்டு சிரிக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்?’

ராவ்பகதூர் நரஸிம்மம் வெகு நாட்கள் போலீஸ் உத்தியோகத்தில் இருந்தார் என்பது வாஸ்தவம்தான்; இருந்தபோதிலும் அவரிடம் சிருங்கார ரஸனை கொஞ்சம் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. அவருடைய எழுத்தாளர்-உள்ளம் இந்த விஷயத்தை வைத்துக் கொண்டு ஒரு அற்புதமான காதல் சித்திரத்தை எழுதலாமே என்றெண்ணியது; ஆனால், ஒரு கௌரவமான தந்தையின் கடமை இப்போது கோபித்துக்கொள்ள வேண்டும் என்பதும் கதை எழுதுவதல்ல என்பதும் அவருக்கு நினைவுக்கு வந்தது.

‘பார்த்துவிடுவோம்! இந்தப் பயங்கரம் இருக்கும் இடத்தில் காதலுக்கு இடம் கிடையாது...’ என்ற ரோஷோத்காரத்துடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

நடராஜன், தம்முடைய அவதார லக்ஷ்யத்தைப் பூர்த்தி செய்துவிட்ட அவதார புருஷனைப்போல, மகிழ்ச்சி கலந்த பெருமூச்சு விட்டான்!

(தொடரும்)



மாதர் மகா சபை

குங்குமம்

“என்னடி நேற்று அகத்தண்டை வந்தாய்; அப்படியே திரும்பி விட்டாயே?” என்றாள் பானுவைப் பார்த்து சரோஜா.

‘நீதான் அகத்தைத் தேடி வந்தவளை ‘வா’வென்றுகூடச் சொல்லவில்லையாம். சேஷிப் பாட்டிக்கும் கேவலமாகவா நாம் போய்விட்டோம்?’ என்று மனம் நொந்து திரும்பி விட்டாளாம். பானு கோபித்துக் கொண்டாலும் கொள்ளட்டும். விஷயத்தைச் சொல்லி விட்டேன்’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘என்ன மாமி, தெரிந்தவர்களே இப்படிக் கோபித்துக் கொண்டால் தெரியாதவர்களைப்பற்றி என்ன சொல்வது?’ என்று சொல்லிவிட்டு, ‘நிஜமாகவே பானுமதி அம்மாள் அவர்களுக்குக் கோபமா என்ன?’ என்று தொங்கப் போட்டுக்கொண்டிருந்த பானுவின் தலையை நிமிர்த்திக் கொண்டே கேட்டாள் சரோஜா.

பானு பதில் ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு ‘உம்’ என்று வைத்துக்கொண்டாள் முகத்தை.

‘நிஜமாகவேதான்போலிருக்கிறது’ அட! கண்றாவியே!’ என்று சொல்லிவிட்டு, ருக்குவின் மாமியாரைப் பார்த்து, ‘நீங்களே சொல்லுங்கள் மாமி, அப்பொழுதுதான் சேஷிப் பாட்டி அங்கே வந்தாள். ‘சரோஜா! ஒரு அதிசயம் தெரியுமோ? பையன் வந்து விட்டான். வீட்டுக்குப் போய் கதவைத் திறந்தாக வேண்டும். சாவியை என்னிடம் கொடுத்து விட்டு ‘எஜமானி அம்மாள்’ (நாட்டுப் பெண்) சபாவுக்குப் போய்விட்டாள். ஆகையால், சீக்கிரம் சொல்லி விட்டுப் போய் விடுகிறேன். ரொம்ப ரகசியம், யாரிடமும் சொல்லாதே’ என்று தெருவில் நின்றிருந்தவளைப் பரபரவென்று கையைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு போய் காதோடு ரகசியம் பேச ஆரம்பித்து விட்டாள். அப்பொழுதுதான் அங்கே பானு வந்தாள். ‘இருடி இதோ வந்து விட்டேன்’ என்று. தெருவில் வந்து சொல்வதற்குள், பானு மாயமாய் மறைந்துவிட்டாள். அவ்வளவு கூடப் பொறுமையில்லாவிட்டால், யாரை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள் மாமி!’ என்றாள் சரோஜா.

‘என்ன குடி முழுகிப்போகிற ரகசியம் சொல்லிவிட்டாள் சேஷிப் பாட்டி? பங்கஜவல்லி சமாசாரந்தானே?’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘அடடே, உங்களுக்கு எப்படித் தெரியும் மாமி?’ என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சரோஜா.

‘உனக்குச் சொன்ன அதே சேஷிப் பாட்டிதான் சற்று முன்புதான் இங்கேயும் வந்து சொல்லிவிட்டுப் போனாள்’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘என்னிடம் சொல்லும்போது பரம ரகசியம் என்று காதோடு காதாய் அக்கம் பக்கமெல்லாம் பார்த்துக்கொண்டு சொல்லிவிட்டுப் போனாளே!’ என்றாள் சரோஜா.

‘இங்கே வந்து சொல்லும்போது மாத்திரம் பகிரங்க விஷயம் என்று சொன்னாளாக்கும்! ‘பரம ரகசியம்’ என்ற அதே பல்லவியைத்தான் இங்கேயும் பாடிவிட்டுப் போனாள்’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘இத்துடன் மாத்திரமா நின்றிருக்கும்? இத்தனை நாழி இந்த ‘பரம ரகசியத்தை’ ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி, இந்த வட்டாரம் முழுவதும்

சொல்லிவிட்டுப் போயிருக்க மாட்டாளா? சேஷிப்பாட்டியின் 'ரகசியம்' தெரியாதா?' என்ருள் இவ்வளவு நாழி தலையைக் குனிந்துகொண்டிருந்த பானு.

எல்லோரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள்.

'அம்மாடி! ஒரு விசாரம் விட்டது. சேஷிப் பாட்டி 'ரகசியம்' எப்படியாவது இருக்கட்டும். அந்த 'ரகசியம்' காரணமாக பானுமதியம்மாளவர்கள் எங்கு 'பேசாமடந்தையாகவே' இருந்துவிடப் போகிருர்களோ என்று பயந்துகொண்டிருந்தேன். அந்த பயம் நீங்கிற்று' என்று சிரித்துக்கொண்டே சொன்னுள் சரோஜா.

'அது கிடக்கட்டுமடி! உலகத்தினுடைய போக்கு எப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது பார்த்தாயா?' என்ருள் ருக்குவின் மாமியார்.

'இதென்ன மாமி! எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் திடீரென்று ஒரு 'புதிர்?' என்ருள் வசந்தா.

'புதிர் ஒன்றுமில்லையடி! பங்கஜவல்லியின் சமாசாரத்தைத்தான் சொல்கிறேன்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'ஏன்? அவள் செய்தது தவறு என்பது உங்களுடைய அபிப்பிராயமா?' என்ருள் விமலா.

ருக்குவின் மாமியார் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் சரோஜா அவளை இடைமறித்து அது சாஸ்திர சம்மதமோ, சாஸ்திர சம்மதமில்லையோ, நேற்று எங்கள் மாமா வந்திருந்தார். 'பங்கஜவல்லி செய்ததுதான்ரொம்ப சரி' என்ருர். அதென்ன அவ்வளவு சுலபத்தில் ஒரு பெரிய விஷயத்தில் முடிவு கட்டி விட்டீர்கள்?' என்ருர் 'இவர்(சரோஜாவின் அகமுடையான்.)இதற்கு மாமா சொன்ஞர்.உங்களுக்கு உலகம்போகிற போக்கே தெரியாது. பழைய சம்பிரதாயங்களையே வைத்துக்கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சுற்றிச் சுற்றி ஒருகுறிப்பிட்ட இடத்துக்குள் அலைந்து கொண்டிருப்பீர்கள். கொஞ்ச நாட்களுக்கு முன் பங்களூருக்குப் போயிருந்தேன். அங்கே நான் பார்த்த ஒரு சம்பவம் என் மனதைக் கலக்கிவிட்டது. இந்தப் பக்கத்தைச் சேர்ந்தவள் தானும். இருபத்தி ஐந்து வயதுக்குள்ளாகத்தான் இருக்கும், பதினேராவது வயதில் கலியாணமாம். பனிரெண்டாவது வயதில் அகமுடையான் இறந்துவிட்டானும். பிறந்தகம், புகுந்தகம் இரண்டும் பரம ஏழையாம். புக்ககத்தில் அதனுடைய அகமுடையான் ஒரே பிள்ளையாம். ஒரு பெண் இருக்கிருளாம். அவள் தன் அகமுடையானுடன் பம்பாயிலோ, டில்லியிலோ இருக்கிருளாம். இந்தப் பெண்ணினுடைய மாமஞர் மாமியாருக்குத் தள்ளாத வயதாம். அவர்களுடைய ஜீவனத்துக்கே தகராரும். பெண் ஏதாவது அனுப்பினுல்தான் உண்டாம். இந்த லக்ஷணத்தில் இந்தப் பெண்ணை எங்கே வைத்துக்கொள்ளப்போகிருர்கள்? பிறந்தகத்திலும் பெற்ரேர்களுக்கு ஒன்றும் கிடையாதாம். ஒரு பையன் இருக்கிருனும். அவன் மாமனர் வீட்டோடுபோய்ச் சேர்ந்துவிட்டானும். இந்தப் பெண்ணையும் ஏன் என்று கேட்பது கிடையாதாம். பெற்ரேர்களைப்பற்றியும் காதில் போட்டுக்கொள்வது கிடையாதாம். அந்தப் பெண் என்னதான் செய்யும் பாவம்!' என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில் 'என்னதான் செய்ததாம்?' என்ருள் வசந்தா.



''.........ரொம்ப ரகசியம் யாரிடமும்.........''

''அவசரப்படுகிறீர்களே! மாமா சொன்னதை மேலும் கேளுங்கள்' என்று சொல்லிவிட்டு, சரோஜா மேலும் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தாள். 'இந்த ஸ்திதியில் அந்தப் பெண் பாவம், உலகத்தில் நாலு பேர் வாய்க்காகப் பயந்துகொண்டு, அதாவது நம்மால் ஒரு ஸமூகத்துக்கு வீண் கெட்ட பெயர் ஏற்படுவானேன் என்று பெற்ரேர்களுடனேயே



“...............ஆம். ஊம். என்றால் சாஸ்திரத்தில்..............”

கொஞ்ச நாட்கள் ‘பல்லைக்கடித்துக்கொண்டு’ ரொம்பவும் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டு வந்ததாம். முழு ஆகாரம் சாப்பிட்டே தெரியாதாம் பாவம் அதற்கு. சில நாளைக்கு ஒரு வேளை ஆகாரத்தோடு இருந்துவிடுமாம். எத்தனையோ நாட்கள் பாவம், பட்டினியாகவே இருந்திருக்கிறதாம். இதன் மத்தியில் ஊராரின் ஏச்சு எவ்வளவோ? சொல்லாமல் கொள்ளாமல் பெங்களூர் போய்ச் சேர்ந்து விட்டதாம். அப்படியெல்லாம் இல்லாமல், பின்னிட்டு அனாவசியமான பேச்சுக்களுக்கு இடம் கொடுக்காமல் பங்கஜவல்லி ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்துவிட்டதை நான் ரொம்பவும் பாராட்டுகிறேன். சரியோ தப்போ, ஒரு பிரச்னை அத்துடன் தீர்ந்துவிட்டது பாருங்கள். ‘என்ன அநியாயம்! தர்மமே அழிந்துவிட்டது. கட்டுப்பாடே போய்விட்டது,’ என்று கூச்சல் போடுகிறார்களா? கூச்சல் போடட்டும். உலகத்தில் அதர்மம் ஏற்படாமல் இருப்பதில் அவர்களுக்கு இருக்கும் சிரத்தையை நான் ஆட்சேபிக்கவில்லை. இப்படி உலகத்தில் நாளுக்கு நாள் தர்மம் நசித்து, அதர்மம் தலை தூக்கி விட்டதே என்றுதான் நானும் வருத்தப்படுகிறேன். வெறும் வருத்தம் மாத்திரம் இருந்து என்ன உபயோகம்? அதற்கு வேண்டிய காரியங்களை செய்கையில் செய்து காட்டவேண்டாமா? என்று மாமா சொல்லும் போது, ‘அதற்கு என்ன செய்யச் சொல்கிறீர்கள்?’ என்றார் ‘இவர்’ சரியான கேள்விதான். இந்த சாஸ்திர ரக்ஷாமணிகள், இப்படி பால்யத்தில் விதவையாகி, அனாதையாகப் போய்விட்டவர்களுக்கு அங்கங்கே ‘நிதி’ ஒன்று ஏற்படுத்தட்டும் அல்லது அவர்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பாதிக்காத அளவுக்கு சாஸ்திரத்தில் ஏதாவது கொஞ்சம் மாறுதல் செய்து கொடுக்கட்டும் அல்லது வேறு ஏதாவது தகுந்த பரிகாரம் செய்து கொடுக்கட்டும். அது இல்லாமல் ஒரு வழிக்கும் போகவிடாமல் பொய்க் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பதில் என்ன உபயோகம்?’ என்றார் என்றாள் சரோஜா.

‘நல்ல வேளை. பக்கத்தில் உங்கள் பக்கத்தகத்து பிரணதார்த்தி மாமா இல்லாமல் இருந்தாரே’ என்றாள் ருக்குவின் மாமியார்

‘அவசரப்படுகிறீர்களே. பிரணதார்த்தி மாமாவும்கூடத் தான் இருந்தார்’ என்றாள் சரோஜா.

‘பதில் ஒன்றும் சொல்லாமலா இருந்தார்?’

‘அவருக்கு ஒரு ஆவேசம் வந்தது பார்க்கவேண்டும். ஆம். ஊம். என்றால் சாஸ்திரத்தில் மாறுதல் செய்யவேண்டும். காலத்துக்குத் தகுந்த மாதிரி சாஸ்திரத்தை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும். இதுதான் தெரியும் உங்களுக்கு. சர்க்காரில் எங்கு பார்த்தாலும் ஒரே லஞ்சமாய் இருக்கிறதென்றால், அதற்காக சட்டத்தில் லஞ்சம் வாங்குவதற்கு இடம் கொடுத்துவிடுவதா என்ன? தலைக்குத் தகுந்த குல்லாயா? குல்லாய்க்குத் தகுந்த தலையா? நமது முன்னோர்கள் எவ்வளவோ தீர்க்க திருஷ்டியுடன் விதிகளை அமைத்திருக்கிறார்கள். நம் குறுகிய, பொறுமையற்ற மனதுக்கு அவை எட்டவில்லை. அதனால் அவரவர்களுக்கு மனம் போனபடி ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒருவன் பாங்கி பணத்தை சாமர்த்தியமாய் மோசடி செய்துவிட்டால், அவனுடைய ‘கெட்டிக்காரத் தனத்தை’ மெச்சிக்கொள்ளும் காலம்தானே இது? அதுமாதிரி தான் அந்தப் பெண் கதையும்’ என்று அவருக்கே ற்பட்ட புரிந்ததும் புரியாததுமான பாஷையில் பேசினார்.’

‘அதான் கேட்டேன்.’

பம்பாயில் பாரதி விழா

பம்பாய் தமிழ்ச் சங்கத்தினுதரவில் சென்ற 7-ந்தேதி 'அமர கவி' பாரதியின் தினம் 'மணிக் கொடி' ஸ்ரீ கு. ஸ்ரீனிவாஸன் தலைமையில் கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி நடைபெற்ற பல போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் படம்.

'ஆமாம்! யார் அது பங்கஜவல்லி? அவள் என்ன செய்தாள்! சேஷிப் பாட்டி சொன்னதை நான் கவனிக்கவே இல்லையே' என்றுள் ருக்கு.

'சரிதான் போ. விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு ராமனுக்கும் சீதைக்கும்...' என்ற கதையாகத்தான் இருக்கிறது நீ கேட்கும் கேள்வி...தெரு...வின் பெண் பங்கஜவல்லியைத் தெரியாதோ உனக்கு?' என்றுள் சரோஜா.

'பாவம். போன வருஷம் அதன் அகமுடையான் போய் விட்டானே' என்று ருக்கு சொல்லி முடிப்பதற்குள் 'ஆமாம், அதே பங்கஜவல்லி தான். கலியாணம் ஆன ஒரு வருஷத்துக்கெல்லாம் அகமுடையான் போய்விட்டான். எங்கள் மாமா சொன்னமாதிரி பிறந்தகம், புகுந்தகம் இரண்டும் ஏழைக் குடித்தனம். அனுவசியமாய் ஒருவர் தயவைப் பார்த்துக் கொண்டிருப்பானே என்று அடுத்த தெரு... ...... ஐமறு விவாகம் செய்து கொண்டுவிட்டாள், என்றுள் சரோஜா.

'அவருக்கு வயது அறுபதுக்கு மேலாகிறதே' என்றுள் ருக்கு.

'ஆகட்டுமே, ஏராளமான சொத்து இருக்கிறது. குழந்தை குட்டிகள் கிடையாது. அகமுடையாளும் சென்ற வருஷம் காலமாகிவிட்டாள். இருக்கிற வரையில் பணக்கஷ்டம் இல்லையே? பார்த்துக்கொள்ளலாம்' என்று சரோஜா சொல்லிக் கொண்டிருக்கையில், ருக்குவின் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. அதிலிருந்து ருக்குவின் அகமுடையானும், கூட் இரண்டு பேரும் இறங்கி உள்ளே வந்தார்கள். உடனே எல்லோரும் எழுந்து தத்தம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

—

'ஸார்! யமனின் பாசக்கயிறுக்குக் கட்டுப்படாதவர்கள் உலகில் உண்டா? பிரமனின் படைப்புக்கு அடங்கியவைகள் மீது சாவின் நிழல் படருவது இயல்புதான். இதற்கு அவன் மட்டும் எப்படி விலக்காவான்?''

"பழுத்த இலை உதிர்ந்தால் அதைப்பற்றி ஒருவரும் சிந்திக்க மாட்டார்கள். தெய்வத்தின் சட்டமது! ஆனால், அன்று விரிந்த தளிர் பறித் தெறியப்பட்டால், அதைப்பற்றி எண்ணாமல் இருக்க முடியுமா? பாவம், அவன் இன்னும் கொஞ்ச காலம் உலகிலிருக்கலாம். தன் கனவு நினைவாகி, உலக சுகங்களை அனுபவித்து விட்டுச் சென்றிருக்கலாம்.''

"ஆனால், விதிவேறாக இநந்தது. அவன் வாழ்வு இவ்வளவுதான் என்று தெய்வத்தின் எண்ணமானால், அதைத்தடுத்து நிறுத்த வேறு சக்தி ஏது? அதைப்பற்றி நினைக்கும்போது கல் நெஞ்சனும் கணம் கண்ணீர் விடாமல் இரான்.

இந்த வாக்கியங்களைக் கேட்டதும்தான் என் சிந்தனை கலைந்தது. திரும்பிப் பார்த்தேன். என் பக்கத்தில் ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். யோசனையில் மூழ்கியிருந்த எனக்கு, அவர் எப்பொழுது வந்தார் என்பதே தெரியாது.

அந்த மனிதரோ என் வரவேற்பையும் பதிலையும் எதிர்பார்த்ததாகவே தெரியவில்லை. தானே மேலும் பேசிக்கொண்டே போனார்.

"நீங்கள் எதைப்பற்றி எண்ணுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்களென்ன? இங்கு வரும் ஒவ்வொருவரும் எதைப் பற்றி எண்ணுவார்கள் என்று கட்டாயம் சொல்வேன்'' என்று சொல்லிக்கொண்டே என் முன் நகர்ந்து உட்கார்ந்தார்.

அறிமுகமே இல்லாத ஒருவர் திடீரென என் முன் உட்கார்ந்ததும், எனக்கு அவருடன் என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

"இந்தச் சமாதி எங்கிருந்து வந்தது? இது யாருடையது? இது தானே உங்கள் உள்ளத்தில் எழும் கேள்வி?'' என்று அவரே என்னைப் பார்த்துக் கேட்டார்.

அவருடைய இந்தக் கேள்வி எனக்கு வியப்பை யூட்டியது. 'என் உள்ளத்தில் உள்ளதை அவர் எப்படி அறிந்தார்?' அவரிடம் ஏதோ ஒரு சக்தியிருப்பதாகவே என் மனது நம்பிற்று. 'ஆம். நீங்கள் சொல்வது சரியே' என்று என் வாய் முணுமுணுத்தது.

"ஸார்! நீங்கள் மன நிம்மதிக்காகத் தனிமையை நாடி வந்திருக்கிறீர்கள். இந்த துக்ககரமான கதையைச் சொல்லி உங்கள் மனதைக் குழப்பக்கூடாது. இருந்தாலும் இந்தக் கதை கேட்க வேண்டியதே. நீங்கள் எந்தப் புத்தகத்திலும் இம்மாதிரியான சம்பவங்களைப் படித்திருக்க முடியாது'' என்று சொல்லிக் கொஞ்சம் நிறுத்தினார்.

* * * * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. பகலெல்லாம் வெய்யில் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது.

மூச்சுக்கூட விட முடியாதபடி அவ்வளவு புழுக்கமாக இருந்தது. வேறு வேலையில்லாததால் பொழுது போகவில்லை. கடிகாரத்தைப் பார்ப்பதும் கொஞ்சம் தூங்க முயற்சிப்பதுமாக நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்தேன்.

மாலையும் வந்தது. பீச்சுப் பக்கமாகப் போய் காற்று வாங்கலாமெனப் புறப்பட்டேன். ஸாந்தோம் பீச்சிலோ ஏகக் கூட்டம். என்னைப்போல்தானே மற்றவர்களும்? இருந்தாலும், கூட்டத்தைக் கண்டதும் மனதில் ஓர் வெறுப்பு ஏற்பட்டது. தனிமையை நாடி தண்ணீர் ஓரமாகவே நடந்தேன். எனக்குப் பிடித்த இடம் ஒன்று உண்டு. அந்த மணல் மேடுதான். அதில் ஏறி உட்கார்ந்ததும் நீலகிரியில் ஒரு சிகரத்தின் மீது இருப்பதாகவே என் எண்ணம்.

தற்செயலாக என் கண்கள் அந்த மேட்டைச் சுற்றிப் பார்த்தன. அதன் ஒரு பக்கத்தில் கல்லறை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதை வாழைக் கன்றுகளும் மாவிலைத் தோரணமும் அழகு படுத்திக்கொண்டிருந்தன. நேற்று வரை இல்லாத இக்கல்லறை இன்று எப்படி வந்தது? இதைப் பற்றிய சிந்தனையிலேயே என் மனது லயித்திருந்தது. இப்பொழுதுதான் அந்த மனிதர் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு அக்கல்லறையைப்பற்றிச்சொல்ல ஆரம்பித்தது. உள்ளம் வேண்டிய சமாச்சாரத்தை வலிய ஒருவர் சொல்ல வந்தால், எந்த மடையன் அதைத் தடுப்பான்?

"அதெல்லாமில்லை. எனக்கும் இதைப்பற்றி அறிய ஆவலாகத்தான் இருக்கிறது. தங்களுக்கு இதைப்பற்றிய விஷயங்கள் தெரியுமென்றே எண்ணுகிறேன். இதைச் சொல்லுவதால் தங்களுக்குத் தொந்தரவு ஒன்றுமில்லாவிடில் நான் அதைக் கேட்கத் தயார்தான்" என்றேன். அவரும் மெதுவாகச் சொல்ல ஆரம்பித்தார்.

* * * *

"கா லி பிரஸ் கந்தசாமி அன்றும் வழக்கம்போல் தன் சாப்பாட்டிற்காக காத்துக்கொண்டிருந்தான். அவன் இடைவேளைச் சாப்பாட்டிற்காக வெளியே வந்து அரைமணி ஆயிற்று. இன்னும் சாப்பாடு வந்தபாடில்லை. இதை எண்ணும்போது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"இந்தக் கிழவியைத் தொலைத்துத் தலை முழுகவேண்டியதுதான். எனக்குக் கொடுப்பதோ ஒரு மணிநேரம். இதைச் சாப்பாட்டை எதிர்பார்த்தே போக்கிவிட்டால் எப்பொழுது சாப்பிடுவது? கொஞ்ச நேரம் நிம்மதியாக உட்காருவது எப்படி?" என்று அவன் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

சுற்றும் முற்றும் பார்த்தான். அவன் நண்பர்கள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு கும்பல்கும்பலாக அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர்.

"எனக்கென்று வாய்த்ததே இந்தக் கிழம்!" என்று உள்ளம் உறுமிக்கொண்டிருந்தது. "ஆனாலும் இவளை விட்டால் வேறு வழியில்லை. நம் வீட்டுப் பக்கத்திலிருந்து வேறு யாரும் மௌண்ட் ரோடு பக்கம் வருவதில்லையே! இவளைக்கொண்டுதான் காலம் தள்ளணும்" என்று தானே சமாதானமும் செய்துகொண்டான். அவன் கண்கள் வழியையே பார்த்துக்கொண்டிருந்தன.

"இங்கே கந்தசாமிங்கரது யாருங்க?" என்று கேட்டுக் கொண்டே அந்தப் பக்கம் ஒரு பெண் சாப்பாட்டு மூட்டையைச் சுமந்துகொண்டு வந்தாள்.

'நான்தான் அது. இங்கே கொண்டா அதை' என்று மற்றவர்கள் பதில் சொல்லு முன் முந்திக்கொண்டான் கந்தசாமி.

மகுடியில் மயங்கும் நாகம் போல அவள் குரலில் தன் கோபத்தை மறந்தான். அம்மூட்டையை வாங்கிக் கொண்டு ஒரு மூலையைப் பார்க்கச் சென்றான். அந்தக் கிழவி ஏன் வரவில்லை? இந்தப்பெண் யார்? என்ற கேள்விகள் அவன் மனதில் உதித்தன. இவ்வளவு பசியிலும் அவன் புத்தி சாப்பாட்டில் செல்லவில்லை. அந்தப் பெண்ணைப்பற்றி எண்ணும் போது அவன் உள்ளத்தில் ஓர் களிப்பு.

ஒருவனாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்தான். அந்தப் பெண்ணும் பாத்திரங்களை எடுத்துப்போக அங்கு வந்தாள்.

'ஏம்மா இன்னிக்கு அந்தக் கிழவி வரவில்லை? நீ அந்தக் கிழவிக்கு என்ன வேணும்?'

'மக வயித்துப் பேத்தி நான். பாட்டிக்கு ராத்திரிலேந்து காய்ச்சலாக இருக்கு. இன்னும் ஒரு வாரத்திற்கு நான்தான் வருவேன்.'

'நீ எதிலே வந்தே?'

'நடந்துதான்.'

'நடந்தா வந்தே? காலிலே செருப்புக்கூட இல்லையே! அதுவும் இந்த வெய்யலிலா? அட பாவமே!'

'அதான் கொஞ்சம் நாழியாயிடிச்சு!'

'சரி! இந்த ரெண்டணாவை வாங்கிக்கோ. ட்ராமிலே போ' என்றுசொல்லி, இரண்டணா நாணயத்தை அவளிடம் கொடுத்தான்.

காசைத்தான் கொடுத்தானோ அல்லது அவன் மனதையே கொடுத்துவிட்டானோ? ஆனால், அவன் நடந்துகொள்வதைப்பார்த்தால், அவன் காசு கொடுத்ததாக ஒருவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

கால்கள் அவனை ஆபீஸை நோக்கிச் சுமந்து சென்றன. மனது அவளைப்பற்றிய கற்பனையில் மூழ்கியிருந்தது. இன்றுதான் ஆசையின் தன்மையையும், அதன் சக்தியையும் அறிந்தது அவனுடைய உள்ளம். அவளுடைய விழிகளின் ஒளிக் கதிர்கள், அவனுடைய இதயத்தையே இழுத்துச் செல்வதை அறிந்தான்.

'ஏன் இன்று அரை நாள் லீவு போட்டுவிட்டு, அவளுடன் பேசிக் கொண்டே போகக்கூடாது?' என்றும் ஒருஎண்ணம் எழுந்தது. 'சே! இன்னும் ஒரு வாரம் அவள் வருவாளே! நிதானமாகப் பேசிக் கொண்டால் போச்சு' என்று தன்னைத்தானே சமாதானமும் செய்து கொண்டான்.

மறு நாளும் வந்தது. அவளும் வந்தாள். ஆனால், சாப்பாடோ நேற்று நடந்த இடத்திலில்லை. பார்க்கில் தான் நடந்தது. ஆபீஸில் சாப்பிட சரியான வசதியில்லை என்று கந்தசாமி சொன்னால், அவள் நம்பாமல் வேறு என்ன செய்வது?

சாப்பாடு வரும் முன்பே கந்தசாமி வடையும் போண்டாவும் வாங்கி வைத்திருந்தான். அவளையும் தன்னுடன் சாப்பிடச் சொன்னான். முதலில் அவள் மறுத்தா

லும் அவன் வார்த்தையைத் தட்ட அவளால் முடியவில்லை. இருவரும் சேர்ந்தே சாப்பிட்டனர்.

அவனுடைய அன்பு ததும்பும் பேச்சும் இனிய சுபாவமும் அவள் உள்ளத்தையும் கவர்ந்தது. இனி சாப்பாட்டு நேரத்தில் களிப்புக்கும் சிரிப்புக்கும் குறைவேது?

ஒரு வாரம் போய் பத்து நாட்களுமாயின. அவள் தான் அவனுக்கு இப்பொழுதும் சாப்பாடு கொண்டு வருகிருள். நடந்தல்ல, ட்ராமில்தான். படிப்படியாக முற்றிய அன்பு, ஒருவரையொருவர் பிரிந்து வாழமுடியாத நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது.

இவனுடைய இந்தக் காதல் நாடகம் எப்படியோ அவன் பெற்றேர்களுக்கு எட்டிவிட்டது. அதற்கு எதிரொலியும் மறுநாளே கிளம்பிற்று. அன்று முதல் அப்பெண்ணிடம் சாப்பாடு கொடுப்பதை நிறுத்திவிட்டனர்.

இதனுல் அவனுடைய காதல் தீயை அணைத்துவிடலாமென எண்ணிஞர்கள்போலும். பரம்பரையாக பெரியவர்கள் காட்டிய பெண்ணை மணந்து வாழ்பவர்களுக்குக் காதலின் தன்மை தெரியுமா? காதலர்களைப் பிரிப்பது காட்டுத் திக்குப் பேய்க் காற்றுப் போன்றது என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள் ?

ஜாடை மாடையாக இவனைப் பற்றி வீட்டில் பேசிக்கொள்வதிலிருந்து தன் விஷயம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது என்று கந்தசாமிக்கும் தெரியாமல் போகவில்லை. இனி விஷயத்தை மறைப்பதில் என்ன பிரயோஜனம்? அதை அவர்களிடம் சொல்லி விடவே தீர்மானித்து, சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு கந்தசாமியும் அவன் தகப்பனுரும் சேர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அவன் தாய் பரிமாறிக்கொண்டிருந்தாள்.

“அப்பா! நான் பெங்களூருக்குப் போகலாமென்று நினைக்கிறேன். எங்க ஆபீஸிலே ஒருவர் அங்கு மாத்தலாகிப் போகிருர். அங்கு வந்தால் சம்பளம் நிறையப் போட்டுக் கொடுப்பதாகச் சொல்லுகிருர்'' என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

கந்தசாமியின் நாடகத்தை முற்றும்அறிந்தஅவன் தகப்பனுருக்கு, கந்தசாமி ஏன் பெங்களூருக்குப் போக எண்ணுகிருன் என்பது தெரியாதா? அவனது செய்கையை எண்ண எண்ண அவருக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. இப்பொழுது அவனுக்குப் பதில் சொன்னுல், ஏதாவது விபரீதமாக நேர்ந்துவிடப்போகிறதே என்று எண்ணி, பதில் சொல்லாமலே சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

“ஏண்டா! வீட்டிலே நான் ஒருத்தி இருப்பதாக எண்ணமே உனக்குக் கிடையாதா? உன் விஷயத்தில் எனக்கு சம்பந்தமில்லையா?'' என்ருள் அவன் தாய்.

''இல்லேம்மா! அதனுல்தானே நீங்க இரண்டுபேரும் இருக்கும்போது இந்த சமாச்சாரத்தைச் சொன்னேன் ?''

“அங்கே போய் சம்பாதிச்சு என்ன மீத்திவிடப் போகிருய்? அதிருக்கட்டும். ஏண்டா கந்தா? உன்னைப்பத்தி ஊர்லேஎன்னமோ பேசிக்கிருர்களே, அதெல்லாம் நிசமா?'' என்று கேட்டுக்கொண்டே அவன் இலையின் முன் உட்கார்ந்தாள் தாய். அவளுடைய கண்கள் அவன் வாயிலிருந்து என்ன வரப்போகிறதோ என்று அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தன.

“ஏம்மா! நான்தான் தப்புத் தண்டா வழிக்குப் போகமாட்டேன் என்று தெரியுமே. அப்படியிருக்க என் மீது ஏன் சந்தேகப்படுகிருய்? ஓகோ! அதான் அந்தப்பெண்ணையும் சாப்பாடு கொண்டுவர வேண்டாமென்று தடுத்துவிட்டாயோ?''

“அவள் ஒரு வலைச்சி. அவளோடு இளிக்கிறதும் சிரிக்கிறதும் தப்பில்லையா? ரொம்ப யோக்கியன்போலப்பேசுகிருயே! அவளுக்குக் காசு கொடுப்பது,'' “இதெல்லாம் என்ன?'' இந்த வார்த்தைகள் அவரையும் மீறி அவன் தகப்பனுர் வாயிலிருந்து வந்தன.

“நான் அவளை மணந்து கொள்ளப் போகிறேன். அந்தத் தீர்மானத்துடன் தான் அவளிடம் அப்படி நடந்து

கொள்கிறேன். வலைச்சியானால் என்ன? பாரதக் கதையின் காரண புருஷர்கள் யார் வயிற்று வழி வந்தவர்கள்? மச்சகந்தியும் வலைச்சிதானே?''

"அதிகப்பிரசங்கித் தனமாகப் பேசாதே. உன் திருமண விஷயத்தில் என் எண்ணமே முடிவானது. அதைப் பற்றிய சிந்தனையே உனக்குக் கூடாது.''

"இல்லையேல்''

"உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை''

"சரி!'' என்று சொல்லிவிட்டு கந்தசாமி விர்ரென எழுந்து சென்றுவிட்டான்.

நாட்கள் சென்றன. கந்தசாமி வீட்டிற்கே வருவதில்லை. ஆனால், பெற்ற வயிறு கேட்குமா? அவன் தாய்மட்டும் அவனைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தாள்.

"அவன் எப்படியாவது போகிறான். இந்தக்காலத்திலேதான் எல்லா சாதியும் ஒண்ணாப் போச்சே! அவன் போறவழியே விடுங்க. அவன் விஷயத்திலே தலையிடாதீங்க. அவன் எங்காவது சந்தோஷமாக இருந்தால் அதுவே எனக்குப் போதும். இந்த ஒரு வாரமா அது வீட்டிற்கே வரவில்லையே. அந்தக் கிழவி வீட்டிலும் போய் விசாரித்தேன். அங்கும் வரவில்லையாம். அவன் எங்கு இருக்கிறான் என்றாவது தெரிந்து கொண்டு வாங்களேன்'' என்றாள் அவன் தாய் ஒருநாள் அவன் தகப்பனாரிடம்.

அவன் தகப்பனாருக்கும் அவன் போனதிலிருந்து மனது குழம்பிக் கொண்டே இருந்தது. ஒரு வயது வந்த பிள்ளையை இவ்வளவு தூரம் கோபித்துக்கொள்ளலாமா என்றும் அப்போதைக்கப்போது தோன்றிக்கொண்டே இருந்தது. அவர் மனைவி சொல்வது சரிதான் என்றும் மனதில் பட்டது.

"அவன் சிநேகிதன் ஆறுமுகத்தை, கந்தசாமி ஆபீசுக்கு வருகிறானா? எங்கிருக்கிறான் என்று கேட்டு வருகிறேன். அவன் மூலமாவது அவனைத் திருப்ப முடியுமா என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் அவன் தலைவிதிப்படி ஆகிறது'' என்று அவன் தாய்க்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர்கள் வீட்டுக்குள் யாரோ வருவதுபோலிருந்தது. அவர்கள் வாசல்பக்கம் திரும்பிப் பார்த்தனர். 'ஐயா! ஐயா!!' என்று கூப்பிட்டுக் கொண்டே இரு சிறுவர்கள் உள்ளே வந்துகொண்டிருந்தனர். "ஐயா! உங்கள் பிள்ளை விஷம் குடித்துவிட்டு சமுத்திரக் கரையிலே செத்துக்கிடக்கார். போலீஸ்காரங்க வந்திருக்காங்க. உங்களை அழைத்து வரச் சொன்னாங்க.'' என்றனர்.

அவன் பெற்றோர்கள் அப்பையன்களைப் பின்தொடர்ந்து ஓடினர். அங்கு கண்ட காட்சியைச் சொல்ல என் நாக்கே கூசுகிறது என்றால், அப்பெற்ற உள்ளங்கள் என்னபாடு பட்டிருக்கும்? இந்த சமாதி இருக்கும் இடத்திலே கந்தன் சவமாகக் கிடந்தான். அவன் மார்பின் மீது அந்தப் பெண்ணும் கவிழ்ந்தபடி கிடந்தாள். உடல் நீலமாக இருந்ததிலிருந்து அவர்கள் விஷம் உண்டு இறந்தனர் என்று தெரிந்தது. அதற்கு சாட்சியாக சிறு புட்டியும் அங்கு கிடந்தது.

"அப்பவே சொன்னேனே கேட்டீங்களா?'' என்று சொல்லிக் கொண்டே அவன் தாய் மூர்ச்சித்து வீழ்ந்தாள். அவனுடைய தகப்பனாரோ முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு ஓர் பக்கமாகப்போய் உட்கார்ந்தார். அங்கு நடந்ததை அதிகம் வர்ணிப்பானேன்? போலீஸ் விசாரணைக்குப் பிறகு சவம் அடக்கம் செய்யப்பட்டது. 'தங்கள் எண்ணம் கைகூடாததால் காதலர்கள் விஷமுண்டு இறந்துவிட்டனர்' என்று பேப்பரிலும் வந்துவிட்டது.

"அன்பால் பிணைக்கப்பட்ட உள்ளங்களை உயிருடன் இருக்கும்போது சேர்த்துப் பார்க்கத்தான் முடியவில்லை. அவர்கள் சேர்ந்து உயிரை விட்ட இடத்தையாவது என்றும் பார்த்துக்கொண்டிருக்கலாம்'' என்று இக் கல்லறையை இங்கே கட்டினார் அவன் தகப்பனார்.

இதுவரை மூச்சுக்கூட விடாமல் படபடவென்று சொல்லிக் கொண்டிருந்த அந்த மனிதர், இப்பொழுது ஒரு பெருமூச்சு விட்டு கொஞ்சம் நிறுத்தினார். என் மனதில் உள்ளதை அறியஎண்ணியது போலிருந்தது அவருடைய பார்வை.

"ஏன் சார்! அவன்தான் பெங்களூருக்குப் போவதாகச் சொன்னானே, அங்கு அவளையும் அழைத்துச் சென்று சந்தோஷமாக இருப்பதற்கென்ன? ஏன் இப்படிக் கோழைபோல விஷமருந்திச் சாகவேண்டும்?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் அவருக்கு வந்த கோபத்தைப் பார்த்தால், அவர்தான் அந்தப் பையனின் தகப்பனாரோ என்று சந்தேகப்படும்படியாக இருந்தது. அவர் சொன்னார்.

"மறு முறை அவனைக் கோழை என்று சொல்லாதீர். ஒரு சமயம் அந்தப் பெண் "நாம் மணந்து வாழ முடியாவிட்டால் சேர்ந்து இறப்பது மேல்'' என்று சொன்னபோது அவன் என்ன சொன்னான் தெரியுமா? ஏன் இப்படி சந்தேகப்படுகிறாய்? என் ஜாதகத்தில் தோல்வி என்பதே கிடையாது. நாம் மனமொத்து மணக்க எண்ணும்போது அதைத் தடுக்க உலகில் யாராலும் முடியாது. இனி அப்படிச் சொல்லாதே. நமக்கு உயிரைக் கொடுத்த பகவான், அதை எடுத்துக்கொள்ளும் உரிமையையும் தானே வைத்துக் கொண்டிருக்கிறார்'' என்றுதான்.

கந்தசாமி எப்படி இறந்தான் என்பதைச் சொன்னால், நீங்கள் நம்புவீர்களா என்று ஓர் சந்தேக முதித்தது. இந்த விவரத்தையும் சொல்லி, மேலும் உங்கள் மனதைக் கலக்கவேண்டாம் என்றும் எண்ணியே நடுவில் அதைச் சொல்லாமல் விட்டேன். நீரோ கேட்டுவிட்டீர். இனி அதைச் சொல்லாமல் இருப்பதற்கில்லை என்றார்.

"ஏன் சார்! பொறாமை எவ்வளவு கெடுதி செய்யும் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று நடுவில் ஓர் கேள்வியும் போட்டுத் தானே மேலே சொல்லவும் ஆரம்பித்தார். "ஒருவன் சந்தோஷமாக இருந்தால், அதைக் கண்டு பொறுக்காத ஜன்மங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தெருவில் ஒரு முனையில் இருப்பவன் மாடி வீடு கட்டினால் மறுமுனையிலிருப்பவன் மனது கொந்தளிக்கிறது. அவன் இவனுடைய சொத்தை எடுத்தா வீடு கட்டுகிறான்? அல்லது இவனுக்கு வரவேண்டியதைத் தடுத்துதான் எடுத்துக் கொண்டானா? இவனுக்கு அதில் சம்பந்தம் இல்லாவிட்டாலும், அவன்வீட்டு மாடியில் கல் ஏற

ஏற இவன் மனதில் பொறுமைத் தீ பிடிப் பிடியாகக் கொழுந்துவிடுகிறது. அவனுடைய பக்கத்து வீட்டுக்காரனைத் தூண்டிவிட்டு வம்பு முடிந்துவிடுகிறான்.''

“அதிகமெதற்கு? ஆபீஸிலே ஒரு டிபார்ட்மெண்டில் இருப்பவனுக்குச் சம்பளம் உயர்ந்தால் வேறு டிபார்ட்மெண்டில் இருப்பவன் அவனைக் கெடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்புகிறான். அவனுக்குச் சம்பளம் அதிகமானதால், இவனுடைய சம்பளம் குறைந்ததா? அல்லது அவனுக்குக் கொடுக்கவேண்டியதை இவனுக்குத் தான் கொடுத்து விடுவார்களா? இம்மாதிரி எவ்வளவோ சம்பவங்களை அன்றாட வாழ்க்கையில் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.''

அம்மாதிரி குணம் படைத்தவர்களில் ஆறுமுகம் ஒருவன். கந்தசாமி ஆபீசை விட்டு பார்க்கிலே சாப்பிடுவானேன் என்று அறிய ஒரு நாள் அவர்களைத் தொடர்ந்து விஷயத்தை அறிந்துகொண்டான். உடனே அவன் மனதில் பொறுமை புகுந்துகொண்டது. ஆறுமுகமோ கல்யாணமானவன். அவன் கந்தனின்மீது பொறுமைப்பட என்ன இருக்கிறது? அதனால் இவனுக்குத்தான் என்ன இடைஞ்சல்? இதை ஒன்றும் அவன் மனது எண்ணவில்லை. கந்தனின் சந்தோஷத்தைக் குலைக்கவே எண்ணமிட்டுக்கொண்டிருந்தது. பிறருக்குக் கெடுதி செய்வதே தொழிலாகக்கொண்ட ஜீவன்களைப் படைத்த தெய்வத்தின் எண்ணம்தான் என்னமோ? தன் காதலியிடம் மற்றொருவன் காதல் கொண்டால் எவ்வளவு கோபம் வருமோ, அவ்வளவு ஆத்திரம் கொண்டான் ஆறுமுகம். இதே ஆத்திரம் கந்தனின் உயிருக்கும் உலை வைக்கத் துணிந்துவிட்டது.

கந்தசாமி வீட்டைவிட்டு வந்ததிலிருந்து இந்த மணல் மேட்டிலேயே குடியிருக்க ஆரம்பித்துவிட்டான். அதோ தெரிகிறதே. அது தான் அப்பெண்ணினுடைய குடிசை. கந்தன் ஆபீஸுக்குப் போகும் நேரம் தவிர, மற்ற நேரத்தை அவளுடன் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இங்கேயே கழிப்பான். இரவில் தூங்குவதும் இந்த மேட்டின் சரிவில்தான்.

இதை எப்படியோ அறிந்துகொண்டான் ஆறுமுகம். ஒரு நாள் மாலை ஏழுமணியிருக்கும். ஆறுமுகம் கந்தனைத் தேடிக்கொண்டு வந்தான். அந்தப் பெண் இன்னும் வரவில்லை. கந்தன் மட்டும்தான் இங்கு இருந்தான். இதுவே அவன் எண்ணியிருந்த காரியம் முடிந்ததுபோல் இருந்தது ஆறுமுகத்திற்கு.

தற்செயலாக கந்தனைச் சந்தித்ததுபோல அவனுடன் பேசிக்கொண்டிருந்தான். விதியை அனுசரித்துத் தானே மதியும் செல்லும்! ஆறுமுகத்தின் பையில் இருப்பது என்ன என்று கேட்டான் கந்தன். கிட்டிய சந்தர்ப்பத்தை நழுவவிடுவானா? தேன் வாங்கிக்கொண்டு போகிறேன். நீ வேண்டுமானால் கொஞ்சம் சாப்பிடேன் என்று சொல்லி, பையிலிருந்து சிறு குப்பியை எடுத்துக் கந்தனிடம் கொடுத்தான் ஆறுமுகம்.

“சார்! நீங்களே சொல்லுங்கள். உலகமே நம்பிக்கையில்தானே இருக்கிறது? வீட்டை விட்டுப் புறப்படும்போது திரும்பி வருவோம் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் வெளிக்கிளம்புவோமா? இதோ நீங்கள் என்னுடன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு ஒரு கெடுதியும் செய்யமாட்டேன் என்ற நம்பிக்கையால் தான். என்னிடம் துளி சந்தேகம் உண்டானால் உங்களை இங்கு பார்க்க முடியுமா?''

கந்தனும் அவனை நம்பினான். அவன் கொடுத்ததை வாயில் ஊற்றிக்கொண்டான். அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அப்படியே சாய்ந்துவிட்டான்.

ஆறுமுகம் வந்த காரியம் ஆகிவிட்டது. தண்ணீர் ஓரமாகவே கம்பி நீட்டிவிட்டான்.

விதி ஒருவாறாக இருந்தால் வேறு விதமாக நடக்க முடியுமா? அவன் சென்றவுடன் அவளும் வந்தாள். தினம் ஓடி வந்து தன்னை எதிர்கொள்ளும் கந்தன், இன்று வராதது அவளுக்கு ஆச்சர்யமாகவே இருந்தது. அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். அவன் திரும்பாமல் படுத்திருப்பதைப் பார்த்து, நல்ல தூக்கம் போலிருக்கிறது என்று எண்ணினாள். அவளென்ன? வேறு யாராக இருந்தாலும் அப்படித்தான் எண்ணுவார்கள்.

கந்தனுடைய முகத்தை அந்த அரை குறை வெளிச்சத்தில் பார்ப்பாள். மனதை வெட்கம் கவ்விக்கொள்ளும். தலையைத் திருப்பிக்கொண்டு அவன்தான் தூங்குகிறானே, சரியாகத்தான் பார்த்து ஆனந்திப்போமே! என்ற எண்ணம் எழும். மறுபடியும் பார்ப்பாள். மறுபடியும் தலை குனிவுதான். இறுதியில் ஏமாந்தாள்.

“அப்புறம் ஆறுமுகம் அகப்பட்டுக்கொள்ளவில்லையா?'' என்றேன் நான்.

மீதி கதையைச் சொல்லி முடிப்பதற்குள், அந்த மனிதனைத் தான் கூப்பிட்டுவிட்டார்களே என்று சொல்லி அவர் கடகடவெனச் சிரித்தார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது இவ்வளவு நேரமும் இவர் சொன்னது கதையா? அப்படியானால் இக்கல்லறை என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

சார்! நான் இங்கு வரும்போது சினிமாவிற்காக ஒரு காட்சியை இங்கே பிடித்துக்கொண்டிருந்தார்கள். அதற்காக ஏற்பட்டதே இந்தக் கல்லறையும். அவர்களுடன் வந்தவன் ஒருவனை ‘என்ன கதை?' என்று கேட்டேன். அவன் சொன்னதைத்தான் உங்களுக்கு அப்படியே சொன்னேன். இக்கதையைக் கேட்கும்போது என் கண்களில் நீர் துளிர்த்தது. மற்றவர்களுக்கும் இப்படித்தான் இருக்குமோ என்று பரீட்சிக்கவே உங்களிடம் சொன்னேன் என்று சொல்லிக்கொண்டே எழுந்து சென்றுவிட்டார்.



திண்ணைமீதும் தெருக்கவெங்கும்
திகழ்ந்திடு வோமே—எங்கள்
வண்ணவண்ண வரிசைகண்டு
மகிழ்ந்திடு வீரே!

என்று பாடிக்கொண்டே ராமுவும் சோமுவும் வந்தார்கள். ‘என்ன, திருக்கார்த்திகைப் பாட்டா? எந்த புதுமைக் கவிஞர் பாடி ஆஸ்தான கவி—பீடத்தில் அமரப் பார்க்கிறார்?’ என்றாள் கமலா.

‘குழந்தைப் பாட்டு; நான்தான் பாடிக்கொடுத்தேன்’ என்றேன் நான்.

‘வரிசை வரிசையாய்த் திருக்கார்த்திகைத் தீபங்கள் எரிய இந்தக் குழந்தைகள் இப்படிப் பாடிக்கொண்டு வருவது எவ்வளவு அழகாய் இருக்கிறது!’ என்றாள் கமலா.

‘இந்த அழகுதான்’ இந்தப் பிள்ளைகளையும் இந்தப் பாட்டை இப்போது பாடச் செய்திருக்கிறது. நான் பாடிக் கொடுத்துப் பல தினங்களாகிவிட்டன. இந்த விளக்கு வரிசைகள் இந்தப் பாட்டை இப்போது ஞாபகப் படுத்தியிருக்கவேண்டும்’ என்றேன்.

ராமுவுக்கும் சோமுவுக்கும் எங்கள் பேச்சு ரஸிக்கவில்லை. அவர்கள்மறுபடியும் பாடத் தொடங்கி விட்டார்கள்:

சீனவெடி கொளுத்த வரும்
சிறுவருக் கெல்லாம்—நாங்கள்
ஆனமட்டும் உதவி செய்தே
அகமகிழ் வோமே!

7

கார்த்திகைத் தீபமும் மகாபலியும்

★

‘விளக்குகளே பேசுகிறமாதிரி அமைந்திருப்பது நன்றாயிருக்கிறது. இதுவும் நீ பாடினது தானே?’ என்று கமலா கேட்டாள்.

‘இது நான் பாடவில்லை. இளம்பிள்ளைக் கவிராயர் யாரோ பாடியிருக்கவேண்டும்?’

‘இளம்பிள்ளைக் கவிராயர் என்று ஒருவர் இருக்கிறாரா?’

‘அப்படி ஒருவரும் இல்லை. கற்பனைப் பெயர்,’ என்றேன் நான்.

‘இந்த நாளில் வேடிக்கை வேடிக்கையாகப் பொய்ப் பெயர்களைப் புனைந்து கொள்கிறார்களே, இந்த இளம் பிள்ளைக் கவிராயரின் மெய்ப்பெயர் தெரியாதோ?’ என்று கேட்டாள் கமலா.

‘அவர் ஒன்றும் இப்படிப் பெயர் புனைந்துகொள்ளவில்லை. அவர் பெயருக்கே ஆசைப்படுவதாகத் தெரியவில்லை. அந்தப் பெயர் தெரியாத பிள்ளைக் கவிராயருக்கே ஆசைப்படுவதாகத் தெரியவில்லை. அந்தப் பெயர் தெரியாத பிள்ளைக் கவிராயருக்கு நானாகத்தான்—அதுவும் இப்போதுதான்—இப்பெயரைச் சூட்டியிருக்கிறேன்,’ என்று பதில் சொன்னேன்.

‘போகட்டும்; கவிராயர் யாராயிருந்தால் என்ன? பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு பாட்டைப் பாடிக் கொடுக்கிறவன் வண்டிக் கணக்காக விவகாரக் குப்பைகளை வாரிப்போடும் கட்டுரையாளர்களைக் காட்டிலும் பெரியவன் தான்’ என்றாள் கமலா.

எங்களுக்கு எதிரே அழகான குத்து விளக்குகள் பன்நிற மலர்கள் சூட்டப்பெற்று மங்களமாய் எரிந்து கொண்டிருந்தன. அந்த விளக்குகளைக் கண்ட கவிதாஸந்தம் கொண்டதுபோல் ராமுவும் சோமுவும்,

காலைமுதல் மலர்ச்சி தந்து
களித்த மலரை—நாங்கள்
மாலைமுதல் முடியில் ஏற்று
மகிழ்ந்திருப் போமே!

என்று பாடினார்கள்.

அச்சமயம் என்தோழிஸரோஜா கர்ப்பூரம் கொளுத்தித் தீப லட்சுமிக்கு அஞ்சலி செய்தாள். உடனே சிறுவர்கள் அந்த வழி பாட்டுக்கு மந்திரம் சொல்வது போல்,

கர்ப்பூரத் தட்டில் ஏறிக்
கமழ்ந்திடு வோமே;—நாங்கள்
அர்ப்பணமாய் ஜோதியாகி
அஞ்சலிப் போமே!

‘இந்தக் கார்த்திகைத் தீபப் பாடல்கள் அழகாய் இருக்கின்றன. இந்தத் திருநாளை இப்படிக் கொண்டாடுவது எனக்குப் பிடித்திருக்கிறது. சிறுவர்களையும் இப்படித்தான் பழக்கவேணும். இல்லாத பொல்லாத புராணக்கதை

களையும் கொள்கைகளையும் கொண்டு புகுத்தி, மகிழ்ச்சிப் பண்டிகைகளையும் மூடபக்திக் களஞ்சியம் ஆக்குவது எனக்குப் பிடிக்கவேயில்லை' என்றாள் கமலா.

'நீ மகாபலி கதையைத்தானே குறிப்பிடுகிறாய்?' என்று கேட்டாள் ஸரோஜா.

'இதற்கு உன் யுக்தியும் வேணுமா? மகா பலியைக் கர்வபங்கம் செய்த நாள் இக்கார்த்திகை திருநாள் என்கிறார்களே, அந்தப் பெரியோர் கற்பனையைக் காட்டிலும் இந்தச் சிறுவர் பாட்டிலுள்ள கற்பனை எவ்வளவு நன்றாயிருக்கிறது! திருமாலும் மகாபலி என்ற சக்கரவர்த்தியை வஞ்சித்துத்தான் வெல்ல முடிந்ததாம் அந்த வஞ்சனையின் வெற்றித் திருநாளாம் இது. கள்ளனாய்க் குள்ளனாகித்தான் கடவுளும் வெற்றி பெற வேண்டுமா?......' என்றெல்லாம் கமலா பிரசங்கிக்கத் தொடங்கிவிட்டாள்.

இந்தப் பேச்சுக்கிடையே ராமு என்னிடம் வந்து, 'அது என்ன கதை? யார் மகா பலியார்? மகா பலம் உள்ளவரா? ஹிட்லரை விடப் பலசாலியா? அந்த ஹிட்லரை ஜயித்தவர் யார்?' என்றெல்லாம் கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டான்.

'ஆம், மகா பலமுள்ள சக்கரவர்த்தி, அந்தப் புராண காலத்தில் ஹிட்லர்போல் ஒரு சர்வாதிகாரி,' என்று நான் கதை சொல்ல ஆரம்பித்தேன்.

கமலா குறுக்கிட்டு, 'ஆம், அந்தச் சக்கரவர்த்தி அசுரன்: அசுரர்களை வதஞ் செய்யத்தான் திருமால் உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்கிறாரே! பலிச் சக்கரவர்த்தி அசுரனானதால் யாவரையும் தேவரையும் மூவரையும் ஹிம்ஸித்தான்' உடனே திருநெடுமால் குள்ளனாய்க் குறுகி வந்தார் தேவரையும் யாவரையும் காப்பாற்ற இதுதானே அம்மா கதை?' என்றாள்.

நானோ 'இல்லை, இல்லை' என்று சொல்லிவிட்டு, 'இந்தக் கதையில் இந்த அசுர சக்கரவர்த்தி நல்லவன், மிகவும் நல்லவன். அவனுடைய ராஜ்யத்தில் பசியும் கிடையாது, பஞ்சமும் கிடையாது. அப்படி வாரிவாரி வழங்கிக் கொண்டிருந்தான். திக் விஜயம் செய்து, தேடிக் குவித்திருந்த திரவியங்களையெல்லாம் சாதுக்களுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் "பிடி பிடி" என்று அள்ளிக் கொடுத்தான். எதிரிகளை "பிடி, பிடி" என்று துரத்தி அடித்தவன். இப்படியெல்லாம் புண்ணியக் கொள்ளை அடித்த மகாபலியை நீ, 'துஷ்ட அசுரன்' என்று கூறியது சரியல்ல' என்றேன் கமலாவை நோக்கி.

'அப்படியானால் என் கட்சிக்கே வெற்றி: சந்தேகம் இல்லை. நல்லவனையா விஷ்ணு சங்காரம் செய்தார்? இந்த மூட புராணங்களையெல்லாம் தீபோத்ஸவம் செய்துவிட்டால்தான் என்ன பிரமாதமாய்க் குடி முழுகிப் போச்சு!' என்றாள் கமலா.

'அவசரப்படாதே, கதையைப் பூர்த்தியாகக் கேட்கவேண்டாமா? மகாபலியைத் திருமால் சங்காரம் செய்தார்என்று யார் சொன்னது? தம் திருவடியைத் தலையில் வைத்துக் கர்வபங்கம் செய்து அருள் செய்தார் என்றுதானே புராணம் சொல்லுகிறது? அப்படி மகாபலிக்கு அருள் செய்த திருநாள் இக்கார்த்திகைத் திருநாள். இதைத் தீபோத்ஸவமாய்க் கொண்டாடுவது பொருத்தம்தான்' என்று சொல்லிவிட்டுக் கதையைத் தொடர்ந்து சொல்வதற்குள்ளே, கமலா மறுபடியும் ஆத்திரம் அடைந்தாள்.

'நீ சொல்லுகிறபடி இருந்தால் நெடுமால் வந்து வஞ்சிப்பானேன்? யாசகனாக வந்து மூவடி மண் கேட்டு மகாபலியின் இராஜ்யம் முழுவதையும் பறித்துக் கொள்வானேன்?' என்று கேட்டாள்.

அதற்கு நான் 'அதைத்தான் சொல்லப் போகிறேன், பொறுத்துக் கேள்' என்று சொல்லத் தொடங்கினேன். மகாபலியிடம் மகா கர்வம் இருந்தது. "நாம் கொடுக்கிறோம்: நமது ஒரு கைக்குக் கீழே எத்தனை இரட்டைக் கைகள் தாழ்ந்திருக்கின்றன! எத்தனை எண்ணான்கு பல் வரிசைகள்,

'பல்லெல்லாம் தெரியக்காட்டி'

என்ற ரீதியில் இளித்து யாசிக்கின்றன!" என்ற செருக்கு அதிகமாயிருந்தது. அந்த வண்மைச் செருக்கை முடித்து, அந்த அசுரனுக்கு அருள் புரியவே மாயன் வந்தான். மாய விளையாட்டு விளையாடினான். "இந்தக் குள்ளனை நம்பாதே! மாயக் கள்ளன், மா மாயாக் கள்ளன்! இந்த மூவடி மண் மோசமான யாசகம்! யோசித்துச் செய்வாய்" என்று குரு சுக்கிராசாரி தடுத்துப் பார்த்தான். "நானா அஞ்சுகிறவன், மோசம் போகிறவன்? கொடுக்க அஞ்சுவேனா? தடுக்கலாமா நீ? மாமாயன் மாய விளையாட்டு விளையாட வந்துவிட்டான் என்றால், திருநெடுமாலின் இரு பெருங் கைகளும் என் ஒரு கைக்குக் கீழாக,

பல்லெல்லாம் தெரியக் காட்டி,
பருவரல் முகத்தில் கூட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானம் என்பதனை வீட்டி,
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி

[பருவரல்—துன்பம். மல்—(இங்கே) வலிமை. வீட்டி—அழித்து. துணைக்கரம்—இரண்டு கைகளையும்.] என்றவாறு; நீட்டியிருக்க, எண் சாண் உடம்பும் ஒரு சாணாய்க் குறுகி நிற்க, அது அவன் விளையாட்டு என்றால், இது என் விளையாட்டு.

ஊரில் எங்கும் பாரில் எங்கும்
ஒளிவிடு வோமே!—மக்கள்
'பார்! பார்!' என்று பார்த்து நிற்க
பரிமளிப் போமே!

என்று துடிக்கிறது என் வண்மைப்புகழ்' என்று கர்ஜித்தவனாய் இறுமாந்தவனாய், மேலும் "மூவடி மண்தானே!" என்று அலட்சியமடைந்தவனாய், பூதானம் செய்தான் மகாபலி.

வாமனுக்கு, "என்ன செருக்கு! இவன் மண்ணா இது? என் பூமியல்லவா?" என்று கருதிய குறளன் நிமிர்ந்துவிட்டான்: வானுற நிமிர்ந்துவிட்டான். வையமும் வானமும் ஈரடியால் அளந்து நின்

ருன். "ஈரடி மண்தானா கேட்டது? மூன்றாவது அடி?" என்றதும் "அடியேன் தலை" என்று தலைதாழ்த்திச் செருக்கை விட்டிருந்தான் மகாபலி. தேவரும் வேதமும் காணாத திருவடி மகாபலிக்குத் திருமுடியாயிற்று. கர்வ வாழ்வு முடிந்தது. ஞானவாழ்வு தொடங்கியது. தன் உள்ளத்திலே இருள்போய் ஒளி மண்டியது கண்ட மகாபலி, "அடியேன் செருக்கு ஒழிந்து, அகத்திலே ஞான அகல் விளக்கை ஏற்றிக் கொண்ட இந்த நன்னாளைத் திருநாளாக மக்கள் அகல்விளக்கும் குத்துவிளக்கும் பிற விளக்குகளும் வரிசை வரிசையாக ஏற்றி வைத்துக்கொண்டாடவேண்டும்" என்று வரம் வேண்டினான் என்று முடித்தேன்.

ராமுவும் சோமுவும் தாமுவும் கூட—விஷயம் புரிந்ததோ இல்லையோ?—கதை கேட்டுக் கொண்டிருந்தார்கள். 'என்ன அழகான கதை!' என்று வியந்தாள் ஸரோஜா. 'ஓஹோ, சக்கரவர்த்திக்கும் பூமி உரியதன்று, கடவுளுக்கே உரியது. ஆகவே, கடவுளின் மக்களுக்கெல்லாம் பொதுவுடமை. எந்த வள்ளலும் மகாபிரபுவும்தான் அடித்த செல்வக் கொள்ளை கொண்டு புண்ணியக்கொள்ளையும் அடித்தவண்ணம் மற்றவர்களை—கடவுளின் மக்களான தரித்திர நாராயணர்களைத் தாழ்த்திப் பார்க்க ஆசைப்படவே கூடாது. எத்தகைய கர்வமும் பங்கம் அடையும், பங்கம் அடையவேண்டியதுதான். ஆண்டவனின் அருள் எல்லையற்றது; வரம்பு கடந்து பொங்கி, வஞ்சிப் பதுபோல் வாழவைக்கும். இருள் போக்கி ஒளி காட்டும், வழி காட்டும்—இப்படி உண்மையான சமதர்ம நாகரிகத்திற்கும் வழிகாட்டக்கூடிய பாடங்களை நாம்இந்தப் புராண கதையிலிருந்து கற்றுக் கொள்ளலாம்! இது எப்படி மூட பக்தியாகும்?' என்றேன் நான்.

'இத்தகைய அழகான புராண பொக்கிஷங்களைப் பெண்களாகிய நாம், போற்றிப் பாதுகாக்கவேண்டும். பயன்பெற வேண்டும்' என்றாள் ஸரோஜா.

ஐக்கிய நாட்டு சபையில் இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு பேசினார். பாரிஸில் அவருக்கு இத்தகைய கவுரவமளிக்கப்பட்டது. நேரு பிரசங்கம் செய்துகொண்டிருக்கையில் எடுத்த படம்.



சென்னை மாகாணக் கம்பவுண்டர்களின் முதலாவது மகாநாடு சமீபத்தில் டாக்டர் கே. நாராயணமூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது. மேஜர் ஸெங்கம்லால் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப்பூங்கோயிலில்



28

மூன்று தியாகிகள்

★

கோவிலில் குங்குலியத் தூபம் இடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? 'கோவிலுக்கே போக வேண்டாம்' என்ற பிரசாரம் நடைபெறும் நாளில், 'குங்குலியத் தூபமா? அது என்ன மூட நம்பிக்கை ஸார்?' என்று கேட்கவும் தோன்றும்.

கலயனார் என்று ஒரு நாயனார். குங்குலியத் தொண்டைக் குறைவற நடத்தி வந்தார். வறுமை வந்தது. எனினும், தொண்டு தவறாது நடந்தது. நில புலங்கள் விற்றும், மாடு விற்றும், வீடு விற்றும் தொண்டு நடந்தது. 'அடிமை' — அதாவது பண்ணையாள் — விற்றும் திருத்தொண்டு குறைவற நிகழ்ந்தது என்கிறார் சேக்கிழார்.

மன்னிய சுற்றத் தோடு
மக்களும் வருந்தினார்கள்.

எனினும், குங்குலியத் தூபம் தவறாது கமழ்ந்தது, திருக்கோயிலில்.

வீட்டிலே பட்டினி போக்கத் தன் மங்கல நூல் தாலியும் விற்று நெல் வாங்கச் சொன்னாள் மனைவி. தாலியைக் கொண்டு கடை வீதி வழியே நெல் வாங்கச் சென்ற கலயனார். குங்குலியப் பொதி கொண்டு அவ்வழியே வந்த ஒரு வணிகனைப் பார்த்துவிட்டார். 'என்ன பேறு பெற்றேன்!' என்று அளவிலா மகிழ்வெய்திப் பொன் தாலியை நீட்டிக் குங்குலியப் பொதி பெற்று விரைந்தோடினார் கோயிலுக்கு.



வீட்டிலோ நாயனாரின் மனைவியும் மக்களும் சுற்றத்தாரும் பசியால் வருந்தி வருந்தி அப்படியே உறங்கிவிட்டார்கள். நாயனாரோ பொங்கிய பக்தியில் பசி மறந்து கோவிலில் பெருமான் திருவடியைப் போற்றிக்கொண்டிருந்தார்.

அம்மையார், கனவிலே நெற்குவியலும் பொற்குவியலும் கண்டு விழித்துக்கொண்டதும், வீட்டிலும் அக்குவியல்களைக் கண்டாராம். கலயனாரும் கோயிலில் ஒரு கனவு கண்டார். அக்கனவிலே சிவபெருமான் தோன்றி, 'வீட்டுக்குப் போய் பசி தீர்த்துக்கொள்வாயாக' என்று கட்டளையிட்டாராம். வீட்டுக்குப் போனதும் அருள் தந்த செல்வம் கண்டு நாயனார், அகமகிழ்ந்து அடியவர்களுடன் அமுதுண்டு வழக்கம்போல் குங்குலியத் தொண்டையும் குறைவற நடத்தி வந்தார்.

இப்படியிருக்கையில், திருப்பனந்தாளில் ('திருப்பனந் தாள் மடம்' என்று பிரசித்தமாய்ச் சொல்கிறார்களே, அந்த மடம்

இருக்கும் ஊரில்தான்) கோயிலிலே சிவலிங்கம் சாய நேர்ந்தது. அந்தச் சாய்வைப் போக்க அரசன் தன்னுடைய சேனை யானைகளையெல்லாம் பூட்டி, அந்த உருவை இழுப்பித்துப் பார்த்தானாம். அவனுடைய விருப்பம் நிறைவேறவில்லையாம். அப்போது கலயனார் அங்கே போய், சிவலிங்கத்தில் பூட்டியுள்ள கயிற்றைத் தம் கழுத்திலே பூட்டி இழுத்தாராம். அந்த அன்புப் பாசம் சிவலிங்கப் பெருமானை இழுத்து நிமிரச் செய்துவிட்டதாம்.

பிறகு கலயனார், தமது ஊராகிய கடவூருக்குத் திரும்பினார். அவ்வழியாகத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் எழுந்தருளக் கண்டு, அவர்களை எதிர்கொண்டழைத்து, அமுது செய்வித்து, ஆண்டவன் அருளோடு அவர்கள் அருளையும் பெற்று வாழ்ந்தார் கலயனார். இவரது முக்கியமான தொண்டை நினைத்து இவரைக் குங்குலியக் கலய நாயனார் என்கிறது பெரிய புராணம்.

வேறொரு நாயனார் ஒரு சேனாதிபதி. சிவனடியார்களைச் 'சிவனே!' என்று கருதித் தம் உடைமைகளையெல்லாம் அவர்களுடைய உடைமைகளாகவே கருதியவண்ணம் கஞ்சானூர் என்ற ஊரில் வாழ்ந்த இவரை மானக்கஞ்சாற நாயனார் என்று குறிப்பிடுகிறது பெரிய புராணம்.

இவருக்கு ஒரு பெண் உண்டு. இப்பெண்ணை ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்ற சிவ பக்தருக்கு மணம் பேசி முடித்தார்கள். மாப்பிள்ளை மணக்கோலம் பூண்டு, உறவினரும் பிறரும் சூழ மணப்பெண்ணின் ஊருக்குப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தார். இதற்குள், சிவபெருமான் மாறுவேடத்தில் மானக்கஞ்சாற நாயனாரின் வீட்டுக்கு வந்தாராம்.

பொடிமூடு தழல்என்னத்
திருமேனி தனில்பொலிந்த
படிநீடு திருநீற்றின்
பரப்(பு) அணிந்த பான்மை
யராய்,
கொடிநீடு மறு(கு) அணைந்து
தம்முடைய குளிர் கமலத்(து)
அடிநீடும் மனத்(து) அன்பர்
தம்மனையின் அகம் புகுந்தார்.

[பொடி—சாம்பல். படிநீடு—உலகத்தை ஓங்கச் செய்யும். மறுகு—வீதியில். அடிநீடும்—அடிகள் பொலியும்.]

நாயனார் தம் புதல்விக்குத் திருமணம் நடப்பதாகத் தெரிவித்ததும், முனிவேடம் பூண்டு வந்த சிவபெருமான் சோபனம் சொல்லி வாழ்த்தினார். மணப்பெண் வந்து வணங்கியதும்,

மஞ்சுதழைத் தெனவளர்ந்த
மலர்க்கூந்தல்

[மஞ்சு—மேகம்.]

கண்டு இது நமக்கு உதவக்கூடும் என்றாராம். உடனே நாயனார் உடைவாளை உருவித் தம் புதல்வியின் கூந்தலை அறுத்து முனிவரிடம் நீட்டினாராம். வாராது போல வந்து வாங்குவார் போல நின்ற மறைப் பொருளாம் சிவ பெருமான் மறைந்துவிட்டார். உடனே உமையம்மையும் தாமுமாய்க் காட்சியளித்தாராம்.

மாப்பிள்ளையான ஏயர்கோன் கலிக்காம நாயனார் இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டதும், 'அடியேன் காணப்பெறவில்லையே!' என்று அந்த அருளை எண்ணி எண்ணி உருகினார். திருவருளால் கூந்தல் முன்போல் வளரத் திருமணமும் இனிது நிகழ்ந்தது.

இன்னும் ஒரு நாயனார் தாயனார் என்ற பெயருடன் சிவபெருமானுக்கு அமுது செய்விப்பதையே தம் முக்கியமான தொண்டாய்க் கொண்டிருந்தார். செந்நெல் அரிசி, செங்கீரை, மாவடு இவை கொண்டு அமுது செய்விப்பது இவர் வழக்கம்.

செல்வராக இருந்த இவரது செல்வங்களெல்லாம் வறண்டு போய்விட்டன. எனினும், நாயனார் தொண்டு தவறாது நிகழ்த்தி வந்தார். கூலிக்கு நெல் அறுக்க இசைந்து, கூலியாகப் பெற்ற செந்நெல்லை ஆண்டவனுக்கு அமுதாக்குவார். கார்நெல் கூலியாகக் கிடைக்கும்போது அதைத் தாம் பசி தீர்த்துக்கொள்வார்.



இப்படி நிகழும் போது, இவர் கூலிக்கு நெல் அறுத்த வயல்களெல்லாம் செந்நெல் வயல்களாகவேகாணப்பட்டன. 'நான் செய்த புண்ணியம் இது!' என்று மகிழ்ந்த நாயனார், கிடைத்த செந்நெல்லை யெல்லாம் ஆண்டவனுக்கே அமுதாக்கிவிட்டுத் தாம் பட்டினி கிடந்தார்.

இந் நாயனாரின் மனைவி, வீட்டு கொல்லைக் கீரைகளைக் கொய்து இவர் பசி ஆற்றி வந்தாள். விரைவில் அந்த இலைக்கறிகளும் அற்றுப் போக,

மனைவி கொடுத்த தண்ணீரைப் பருகித் தொண்டாற்றி வந்தார் நாயனார்.

ஒரு நாள் இவர் வழக்கப்படி ஆண்டவனுக்குச் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு போனார். பின்னே மனைவி பஞ்சகவ்யம் ஏந்திய கலத்துடன் சென்றாள். உணவில்லாமல் களைத்துப்போயிருந்த நாயனார், கால் தவறி விழலானார். மனைவி உதவி செய்ய முயன்றும் பயன்படவில்லை. செந்நெல் முதலியன நில வெடிப்பில் சிந்திவிட்டன. 'ஐயோ! இன்று ஆண்டவன் அமுது செய்யும் பேறு பெற்றேனில்லையே' என்று நாயனார் வருந்தி, அரிவாளை எடுத்துத் தம் கழுத்தை அறுத்துக்கொள்ளத் தொடங்கினார்.

உடனே அன்பர் கையைத் தடுக்க வீசி எழுந்ததாம் ஆண்டவன் கை. மாவடுவை 'விடேல் விடேல்' என்று கடிக்கும் ஓசையும் கேட்டதாம். எங்கே? அந்த நில வெடிப்பிலிருந்துதான் ஓசையும் எழுந்தது. கையும் எழுந்து கையைப் பிடித்துக்கொண்டது.

விசிய செய்ய கையும்
  மாவடு விடேல்வி டேல்என்று
ஓசையும் கமறில் நின்றும்
  ஒக்கவே எழுந்த அன்றே!

[செய்ய—செம்மையான. கமற்—வெடிப்பு.]

* * * *

இம் மூன்று கதைகளும் தியாகக் கதைகள். தாயனார் என்ற நாயனார் அரிவாள்—தாய நாயனார் என்ற பட்டப்பெயருடன் ஒரு லட்சியத்திற்காக உயிர் கொடுக்கும் துணிவுக்கு அறிகுறியாகக் காண்கின்றார். மானக்கஞ்சாறர் தம் அருமை மகளின் கூந்தலையும் ஒரு பெரியாரின் விருப்பத்திற்கு இணங்கத் தியாகம் செய்ததும், தியாக வைராக்கிய வாழ்க்கைக்கு ஒரு நினைவுக் குறிதான். குங்குலியக் கலயரும் பக்திக்கும் தியாகத்திற்கும் பெரு நம்பிக்கைக்கும் ஓர் அருமையான சாட்சிதான்.

எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப் பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.



சிவராமன் ராமனாதனைத் தனியே மாடிக்கு அழைத்துச்சென்று அழகிரிசாமியிடம் தான் கொண்டிருக்கும் சந்தேகங்களை விளக்கிக் கூறினார். ராமனாதனுக்கும் உஷா ஸினிமாவில் நடிப்பதைப்பற்றி மனக் குழப்பங்களைக் கிளறிவிட்டார். உஷாவுக்கே அவ்விஷயத்தில் அருவருப்பு இருப்பதைத்தான் உணர்வதாகச் சாதித்தார். ராமனாதன் ஏற்கனவே அழகிரியின் மேல் பார்வையில்தான் அடிமைத்தனமாய் வாழ்வதுபற்றி உஷா தன்னிடம் குறை கூறிக்கொண்டதை ஞாபகப்படுத்திக்கொண்டான். மாமா சிவராமனின் வார்த்தைகளில் அவனுக்குப் பூரண நம்பிக்கை உண்டாயிற்று. உஷாவைப்பற்றிய கவலை அவன் மனதைப் பற்றிக்கொண்டது. மாமாவுடன் அவளுடைய விடுதலையைப்பற்றிச் சிந்தனைகள் செய்யலானான். சிவராமனும் ராமனாதன் மூலமாக உஷாவை விடுவிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அவன் உஷாவை ரிஜிஸ்டர் விவாஹம் செய்து கொள்வதற்குத் தான் உடந்தையாயிருப்பதாயும், குடும்ப மனஸ்தாபங்கள் ஏற்பட்டாலும் கூடிய மட்டும் அவைகளைச் சாந்தப்படுத்த முயலுவதாயும் ராமனாதனுக்கு வாக்களித்தார். வெங்கடசுப்பையரிடம் பேசி, ராமனாதனுக்கு அனுகூலமான ஒருகுடும்பப் பிரிவினை ஏற்பாட்டைச் செய்து வைப்பது சாத்தியமாகுமென்றும் அவர் கூறினார். ராமனாதன் அவருடைய பக்க பலத்தினால்தான் அழகிரி என்னும் முதலை வாழும் அகிழைத் தாண்ட முடியுமென்று உணர்ந்தான். தான் காதலித்த உஷாவை அடையும் விஷயத்தை வெகு சுலபமாய் மதித்து, இடையூறுகளை எதிர்பாராமல் தன் நம்பிக்கை கொண்டிருந்தது எவ்வளவு சிறு பிள்ளைத்தனம் என்பது அவனுக்கு அப்போது பிரகாசமாயிற்று.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் புத்ரனான அநிருத்தன் உஷாவை முதலில் சித்ரலேகை மூலம்சந்தித்துக் காதலித்ததற்கும், பின்பு உஷாவின் பிதாவான பாணாசுரனின் கொடுமையான ஆக்ஞைக்கு உள்ளாகித் துன்பங்களை அனுபவித்ததற்கும், ராமனாதனின் சரித்திரத்திற்கும் இருக்கும் ஒற்றுமையைச் சிவராமன் அவனுக்கு விளையாட்டாக எடுத்துக் காட்டினார்.

“உனக்கு பாணாசுரன் அழகிரி. ஜாக்கிரதை ராமனாதா. அந்த உஷா பரிணயம், மஹா விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணனும் பாணாசுரனின் உபாஸனா தைவமான ஸ்ரீ பரமேச்வரனும் இறுதியில் ஒற்றுமைப்பட்டு அனுமதித்ததால் நடந்தது. உன் உஷாபரிணயமும் சிவ விஷ்ணு ஸ்வரூபியான சிவராமனான என் பிரயத்தனத்தால்தான் நடைபெறப்போகிறது” என்றெல்லாம் மாமா சிவராமன் ராமனாதனுக்குக் கதைகள் சொல்லிக்கொண்டு தமாஷாக இரவைக் கடத்தினார்.

ராமனாதன் தூங்கிவிட்ட பின் சிவராமன் வெகு நேரம் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டு ஆலோசனைகள் செய்து கொண்டிருந்தார். “நான் செல்லத்தின் கல்யாணத்திற்காகப் பிரயத்தனம் செய்யத் தொடங்கி உஷாவின் கல்யாணத்தை உடனே முடித்து வைப்பதில் ஆர்வம் கொண்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் என் அருமைப் புதல்வி செல்லத்திற்கு வெகு நாளாய்சங்கல்பித்து வைத்திருந்த வரனை நானே இப்போது என் ஒழுக்கத்தில் படிந்த மாசு மருப்போல் உதித்த ஒரு எதிர்ச்சா கன்னிகைக்கு அமர்த்திவிடத் தீவிரமாய் முனைந்திருக்கிறேன். என்ன ஆச்சர்யம். மனுஷ்ய சங்கல்பம் தைவ சங்கல்பத்தின் முன் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறக்கிறது. இதனால் எனக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படப் போகின்றன என்பது கணக்கிட முடியாது. முதலில் அக்கா, அத்திம்பேர்களுக்குப் பொல்லா விரோதியாவது நிச்சயம். அவர்களின் பிள்ளையை நான் கெடுத்து விட்டதாய்த்தான் அவர்கள் நினைப்பார்கள். என் குழந்தைக்கு ஆருக்துயர மூட்டும பாதகனாவது இரண்டாவது. எவ்வளவு பெரிய குடும்பத்தில் உயரிய வாழ்க்கை நடத்தவிருந்த பாக்கியத்தை அவள் இப்பொழுது இழக்க நேரிடுகிறது. அவள் பிராப்தம் எப்படியோ. அக்கா சங்கரி ஆதி முதல் என்னோடு சம்பந்தம் செய்வதை சுமுகமாய் அங்கீகரிக்கவில்லையென்றாலும், ராமனாதன் செல்லத்தின் விஷயத்தில் உதாசீனமாயிருந்தான் என்றாலும், இதையெல்லாம் சொல்லாமல் காரியம் கெட்டுப்போன பிறகு சிவராமன் கெடுத்துவிட்டான் என்றுதான் எல்லோரும் ஏகோபித்துப் பறை அறைவார்கள். ஊர் ஜனங்கள் என்னை

வெறுத்து வாயில் கொட்டிக் கொள்வது நிச்சயம். தன்சொந்தப் பெண் கல்யாணத்தைப்பற்றிச் சிரத்தையெடுத்துக்கொள்ளாமல் தன் வைப்பாட்டி மகளுக்கு முதலில் விவாகத்தைச் செய்து வைக்கும்புண்ணியவான்என்றுஎன்னைச் சந்தி சந்தியாய்க் கேலி செய்யத் தொடங்குவார்கள். எல்லாம் வாஸ்தவம். எல்லாம் எனக்கும் தெரியும். இருந்தாலும் முன் வைத்த காலைப் பின் வைக்கமுடியாத ஒருநிலையில் என்னைக் காலப்போக்கு, ஒரு சுழலில் கொண்டு போய் மிதக்கும் பிராணியைப்பிரவாஹம் சொருகுவது போல் மாட்டிவிட்டிருக்கிறது. என் நிலைமையில், என் நிர்ப்பந்தங்களின் மத்தியில், என் திருஷ்டிக்கு எது நீதியோ, எது மதியோ, எது உசிதமோ, எது தக்கதோ அதைத் தானே நான் நிச்சயம் செய்ய முடியும். பிறர் ஏசுவதையும், பேசுவதையும் நினைத்து என்ன பிரயோஜனம். உலகம் பலவிதம். எல்லோருடைய நோக்கங்களையும் புத்திகளையும் நம்பிப் பின்பற்றி ஒருவன் நடந்தால், கழுதை விற்கப்போன கிழவன், அதை ஆற்றோடு போக விட்டு விட்டு வீடு திரும்பின கதையாகத்தானாகும்.''

* * * * *

மறுநாள் காலையில் வெகு சீக்கிரமாகவே மாமாவும் மருமானும் வெளியே புறப்பட்டார்கள். சிவராமன் அழகிரியின் வக்கீல் விச்வநாத அய்யரின் வீட்டிற்குச் சென்றார். அழகிரியை அவ்விடம் அழைத்துவர ராமநாதனை அனுப்பினார்.

சிவராமன் வக்கீலிடம் உஷாவின் சங்கட நிலைமையைப்பற்றி அந்தரங்கமாய்ப் பேசினார். வக்கீல் தன்னால் இயன்றமட்டும் அழகிரியை வளைத்துக்கட்டி, ஒப்பந்தத்தை நிறைவேற்றிவிடும்படிச் செய்வதாய் வாக்களித்தார்.

ராமநாதன் சற்று தாமதித்துப் போயிருந்தால் அழகிரியை வீட்டில் கண்டுபிடித்திருக்க முடியாது. அழகிரிக்குத் தான் வாக்குறுதி செய்தபடி உடனே நிறைவேற்றிவிடும் ருசுவான எண்ணம் கிடையாது. தட்டிக் கழித்துவிடுவதிலும், பின்னால் சந்தர்ப்பம் போல் நடந்துகொள்வதிலும்தான் நோக்கம். ஆனால், ராமநாதன் அழகிரியை அதிகாலையிலேயே போய்ச் சந்தித்தான். மாமா சிவராமன் வக்கீல் விச்வநாதய்யர் வீட்டில் வந்திருப்பதைத் தெரிவித்தான். தன்னுடன் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் வேண்டினான். அழகிரி வெளிப்படையாய் உயர்ந்தநெறியுடன்நடந்துகொள்வதில் முயற்சியுள்ளவனாதலால், ராமநாதனுடன் புறப்படத் தயாரானான். மத்தியில் ராமநாதன் உஷாவைக் கண்டு பேசாமலிருக்கவில்லை. அவளுடைய மனப்போக்கு மாமா சிவராமன் சொன்னபடியே இருப்பதை நன்கு அறிந்துகொண்டான். ராமநாதனுக்கு மாமாவின் பாதையையே பின்பற்றி, அவருக்கு எவ்விதத்திலும் உதவியாயிருப்பதே தன் நலம் என்பது தெளிவாயிற்று.

ராமநாதனுடன் அழகிரி வக்கீல் வீடு வந்து சேர்ந்ததும் முதல் நாள் பேசிய ஒப்பந்தத்தை ஸ்திரப்படுத்தும் வகையில் சிவராமனுக்கும் அழகிரிக்கும் வக்கீலுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் துவக்கமாயின. வக்கீல் ஒரு ''எக்ரிமெண்டாக'' எழுதிய அந்த நிபந்தனைகளை ஊர்ஜிதப்படுத்த இரு தரத்தாரையும் தூண்டினார்.

''அழகிரி, அது அவசியமில்லை. ஒருவரையொருவர் நம்பாவிட்டால் அல்லவா தஸ்தவேஜி செய்யவேண்டும். இவரோ பெண்ணின் தகப்பனார்; நானோ அவளுக்குத் தாத்தா. இருவரும் கண்யமுள்ளவர்கள். யார் யாரை மோசம் செய்துவிடப்போகிறார்கள். பேசின வார்த்தையே போதும். அதற்கும் நீங்கள் சாக்ஷியாகவிருக்கிறீர்கள். உங்கள் முன்னிலையில் ஒன்று சொல்லிவிட்டு பின்பு பேச்சுப் பிறழ்வது என்பது சாத்தியமாகுமா. இன்று நேற்று நான் உங்கள் கக்ஷிக்காரனாயிருக்கிறேனா? தஸ்தவேஜி ஒன்றும் வேண்டாம். இருவரும் பேசியபடி தொகையை பாங்கில் கட்டிவிட்டால் தீர்ந்தது விவஹாரம். அதைச் செய்ய முதலில் யத்தனிப்போம்'' என்று உபன்யஸிக்கலானார்.

வக்கீல் ''யார் பேரில் பாங்கில் போடுகிறது?'' என்று கேட்டார்.

''ஏன்: அந்தக் குழந்தைக்காக அவள் கார்டியனாயிருக்கும் என் பேரில் பணத்தைப் போட்டு வைத்தால், பிற்பாடு அவளுக்கு வயது வந்ததும் அவள் பேரில் அந்தப் பணத்தை மாற்றிவிடுகிறேன்: அல்லது அவளுக்கு விவாஹமாகிவிட்டால் அவள் புருஷன் பேரில் வேண்டுமானால் மாற்றிவிடுகிறேன். அதுதானே கிரமம், நியாயம்? அதுதானே வழக்கம்? இதில் சந்தேகமென்ன? ஐயாவுக்குத் தெரியாதா? நான் சொல்லியா தெரியவேணும்!'' என்று அழகிரி அதிகத்வனி கொடுத்து அழுத்தமான தன்னம்பிக்கையுடன் பேசினார்.

வக்கீல், சிவராமன் முகத்தில் சாயை மாறி, கிகில் குடிகொண்டதைக் கடைக்கண்ணால் கவனித்துவிட்டுப் பேசலானார்.

''நல்லது அழகிரிசாமி. பணத்தை பாங்கியில் போடுவதற்கு ஆதாரமான தஸ்தவேஜி ஒன்று அவசியம்தான். அப்படியே சிவராம அய்யரும் நினைக்கிறார். அவ்வித தஸ்தவேஜி அதிகப்படியான முன் ஜாக்கிரதை என்று நீங்கள் நினைக்கிறீர்களே யொழிய, அப்படி ஒரு தஸ்தவேஜி ஏற்படுத்தக்கூடாதென்றாவது, அதை ஏற்படுத்தினால் அசௌகரியம் உண்டாகும் என்றாவது நீங்கள் நினைக்கவில்லையே'' என்று வக்கீல் கேட்டார்.

அழகிரி ''நான் அதை ஆக்ஷேபிக்கவில்லை. ஏன் அவ்வளவு பிரயாசை என்று தான் சொன்னேன்'' என்று கொஞ்சம் தணிந்த குரலில் பதிலளித்தார்.

வக்கீல் அதையே சம்மதியாய் வைத்துக்கொண்டு தஸ்தவேஜி எழுதவாரம்பித்தார். அதன்படி சிவராமனும் அழகிரியும் உஷாவுக்குத் தலைக்கு ரூ. 5000 மூலதனம் ஏற்படுத்தி, ஒரே கணக்கில் பாங்கில் அவளுக்காக அவள் கார்டியன் பெயரில் அந்த ரூ. 10,000 த்தையும் உடனே போட்டு வைப்பது என்றும், அவள் மெஜாரிடி

அடைந்ததும் அந்தப் பணம் அவள் பெயருக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், அவள் விவாஹம் செய்துகொண்டால் அவள் புருஷனே அவளுக்குக் கார்டியனாகி விடுவானென்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன.

ராமனாதன் தனக்கு அழகிரி கொடுக்கவேண்டிய ரூ. 1000த்தை ஞாபக மூட்டினான். வக்கீல் அதை மேற்படி தொகையுடன் சேர்க்க வேண்டாமென்றும், அதற்கு அழகிரி ராமனாதனுக்குத் தனியே ஒரு செக் கொடுத்து விடலாமென்றும் ஆலோசனை சொன்னார். அழகிரி அப்படியே ஒத்துக்கொண்டான்.

ஆனால், தஸ்தவேஜி பூர்த்தியடைய உஷாவின் கார்டியன் யாராகவிருக்க வேண்டுமென்பது விவாதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அழகிரி அந்த விஷயத்தில் தன் உரிமையே முதன்மையானதென்று வற்புறுத்தினான். சிவராமன் தனக்கே அவ்வுரிமை உண்டென்றும், வேறு யாரும் அதைப் பாதிக்கமுடியாதென்றும் வாதாடினார். ராமனாதன் "இருவருக்கும் வேண்டாம். உஷாவைக் கல்யாணம் செய்துகொள்ளவிருக்கும் நானே கார்டியனாக வேண்டும்" என்று தெரிவித்துக் கொண்டான். வக்கீல், ராமனாதனை உடனே கார்டியனாக நியமிக்கச் சட்டபூர்வமான சில ஆக்ஷேபணைகளைத் தெரிவித்தார். அவன் மறுதினமே உஷாவை விவாஹம் செய்துகொள்வதன் மூலம் கார்டியனாகலாமென்றாலோ, என்ன ரீதியில் விவாஹம் செய்துகொள்வது என்பது சங்கடமான பிரச்னை என்றும் எடுத்துக் காட்டினார். அவள் 15 வயது மைனரான படியால் ரிஜிஸ்டர் விவாஹ ஒப்பந்தத்திற்கும் லாயக்கில்லாதவள் என்று நிரூபித்தார். இதனால் ராமனாதனின் கோரிக்கை ஒதுக்கிவைக்கப்பட்டது. சிவராமனுக்கும் அழகிரிக்கும் கார்டியன் முறைமை விஷயத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனோபாவம் இல்லை. சிவராமன் அழகிரியை நம்பவில்லை. அழகிரி சிவராமனிடம் உஷாவையும் பணத்தையும் ஒப்புவிக்க இஷ்டப்படவில்லை. மேலும், அழகிரி உஷாவைத் தன் கார்டியன் ஆதிக்கத்திலிருந்து தற்சமயம் விடுவிக்கப் பல இடையூறுகளிருப்பதாயும் ஒரு புதிர் போட்டார். வக்கீல் தந்திரமாகக் கேள்விகள் கேட்டு, அழகிரியிடமிருந்து சில வாக்குமூலங்களை வாங்கினார். அப்போது அழகிரி, சக்ரபாணியின் சினிமாக் கம்பெனியில் மூன்று வருஷத்திற்கு உஷாவுக்கு ஒரு ஒப்பந்தத்தை கார்டியன் முறைமையில் செய்திருப்பதாய் வெளியாயிற்று. அவ்வொப்பந்தம், உஷாவின் முற்போக்கிற்கும், கீர்த்திக்கும், அந்தஸ்து உயர்வுக்கும் அனுகூலமாகுமென்றும், வேறு கார்டியன் ஏற்படுத்துவது அவ்வொப்பந்த முறிவுக்குக் காரணமாகுமென்றும், அம்முறிவினால் ஏற்படும் நஷ்டங்களுக்குத் தான் உத்தரவாதியாக நேரிடும் என்றும் மிகுந்த ஆவேசத்துடன் அழகிரி கக்ஷியாடினார். இவ்வாறு விவாதங்களினால் 'டிராப்ட்' செய்யப்பட்ட ஒப்பந்தம் கையொப்பமிடப்படாமல், பேச்சுகள் முறிந்து போய்விட்டன.

வக்கீல் இரு தரத்தாரையும் சமாதானப்படுத்தும் முறையில், "நாளைக்குள் நான் உங்களிருவருக்கும் சம்மதமாகும்படியான ஒரு வழியை ஆலோசித்துச் சொல்கிறேன். இந்தப் பேச்சுக்கள் மனஸ்தாபத்தில் முடியக்கூடாது. மைனரும் தாயில்லாக்குழந்தையுமான உஷாவின் நன்மையை உத்தேசித்து நீங்கள் சிறிது தணிந்து போகவேண்டும். நாளையதினம் நான் உங்களுக்குச் சொல்லியனுப்புகிறேன். வாருங்கள் ஒரு முடிவு செய்து விடுவோம். அதுவரை தயவுசெய்து இந்த விஷயமாய்ப் பரஸ்பரம் வாக்குவாதம் செய்துகொள்ளவேண்டாம்என்று கேட்டுக்கொண்டார்,

(தொடரும்)

காஷ்மீர்-குஸூம்
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு
எண்ணெயில் கலக்கவும்
M.P. & Co's
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி
பரு, புண்களுக்கு
(கூடிவர உதவி)
M R ஜெட்டப்பா அவர்களின்
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்
ஏஜெண்ட்கள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதராஸ்.
நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.
டிப்போக்கள் : மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை கோகலே ஹாலில், பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டி ஆதரவில் சிறப்பாக நடனம் செய்த ஸ்ரீமதி குமாரி சரோஜா, கச்சேரியின் அபிநயப் பகுதி உயர்வாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

குமாரி டி. ஜானகி:—இவர் பரத நாட்டிய அபிநயக் கச்சேரி சமீபத்தில் ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்,

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட் ரோடு, சென்னை.

கட்டுரையாளருக்கு

★

'சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள் கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள, தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிககாட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமல் விலக்க வேண்டும்.

—ஆசிரியர்.



ஈச்சங்குடி ஸ்ரீ சங்கரநாராயண ஐயர் குமாரரும் "மித்திரன்" காரியாலயத்தைச் சேர்ந்தவருமான ஸ்ரீ ஈ. எஸ். ரத்னமிர்தத்திற்கும், ஆவிடையார்கோவில் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் குமாரி சௌ. கோமதிக்கும் சமீபத்தில் கோட்டையூரில் விவாகம் நடந்தது.

பரிசு திட்டம்

31-10-48ல் மித்திரன் 42-வது பக்கத்தில் வெளியிட்டுள்ள தீபாவளி பரிசு திட்டத்தில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் நமது அன்பான வணக்கத்தைத் தெரிவிக்கிறோம். நூற்றுக்கணக்கான சகோதர சகோதரிகள் பரிசு திட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் வருத்தம் தெரிவித்திருப்பதால் நாம் அதற்கிணங்கி மீண்டும் ஷை பரிசு திட்டத்தை 3௦-11-48 வரை நீடித்து வைத்திருக்கிறோம். முன் திட்டத்தில் கலந்துகொள்ள முடியாத ஏனைய அன்பர்கள் இத்திட்டத்தில் கலந்துக் கொள்ள இதை கத்தரித்து விலாசமுடன் 30உக்குள் நமக்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். இத்திட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் போஸ்டேஜ் & பாக்கிங் சிலவுகள் இலவசமாகவே அனுப்பி வைத்து வருகிறோம்.

பெயர்..............................

ஊர்......................தேதி.........

JOTHI FABRICS,
KOTTAR — TRAVANCORE.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும்இருக்கலாம், 30மாத்திரை சீசா1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசிகரண மூலிகை, பிரதி ஸரஸூத்ரம்,ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது, கவசம் 1-க்கு ரூ. 3,

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது.எங்கும் கிடைக்கும்.கேட்லாக்இனம. ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை கொடுக்கும்



देवामृतम
'भीम-वीर'
शाश्वत शक्ति देनेवाला है

RESTORES MAN HOOD
Nectar of Life
MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

''பீம-வீர்'' பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும, வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.
40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.
ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4



501 ஸோப்பால்
வெளுக்கப்பட்டது.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

காங்கிரஸ்
மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றாம் பாகம் ,, ரூ. 2.
தபாற் செலவு அணா 10.
முன்பணம் அனுப்பவேண்டும்.
V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர் :
''சுதேசமித்திரன்'' புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.



வயிற்று நோவுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக்கூடிய
R.P.S. முப்பு சூரணம்

ஆண், பெண் இருவரும். இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினால் தயாரிப்பு வயிற்றுப்புண், அஜீரணம், மலசிக்கல் வயிற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயிறு நோவுதல், குடல் கொந்தளிப்பு மேக சம்பந்தமான வியாதிகளையும் போக்கும். 4 அவு பாட்டில் 1-க்கு விலை ரூ. 3. (த. செலவு தனி)

Dr. R. P. சாரதி. மகாத்மா காந்தி சித்த வைத்தியசாலை
தர்மராஜா கோவில் தெரு சிந்தாதிரிப்பேட்டை சென்னை

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானல் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

S.A.H. TRADE MARK

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணெய்-கஸ்தூரிகுங்குமப்பூ-கோரோஜனம் – ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாட்டர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'



உங்கள் முகப்பருவைப்போக்கி, சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது 'காஸினோ ஸ்னோவே' வாங்கும்பொழுது "காஸினோ" மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1

உங்கள் எதிர்காலம்

பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து, பார்வை குன்றி. கஷ்டப்படும் அன்பர்களே!

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத்தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம், சுவாசக் குழாய்களிலிருக்கும் புழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக்கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி, பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM.

189, வக்கீல் புது தெரு - P. B. No. 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு. சென்னை. G. T. 58E, தர்மராஜா கோயில் தெரு. பெங்களூர், 179, SEA ST., COLOMBO.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகிறீர்கள்,

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்,

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உறை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்,

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.
மதராஸ் 1.



மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்,

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும, வாஸலைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B A.

Regd. No. 2514.

தலையிட்டோர் சூழ்ச்சி பலிக்கவில்லை



தேவஸ்தானம்
கமிட்டி

திருப்பதி
26-9-48.

பகவான் ஸ்ரீவெங்கடேஸ்வரரின் ரத்னகிரீடத்தில் திகழும் அபூர்வமான வேலைப்பாட்டை கவனிக்கும்போது அதைத்தயாரித்த ஸூரஜ்மல் கம்பெனியாரின் உன்னதமான வேலைத் திறமையில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக்கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக்கமிட்டியார் மிக்க மகிழ்ச்சியடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு,
கமிஷனர்.

முடிவில் . . . .

உண்மை ஊர்ஜிதம்

ஸூரஜ்மல்ஸ்

திருப்பதி ரத்ன கிரீடம் தயாரித்தவர்.

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.